V 5 10.22 2 June 1932

3L
M211, N28KN
M32.5.22
188970

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

5 - JUL 193

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஹு ஜூன் மீ 2உ [No. 22

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	421
2.	கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	423
3.	தமிழ்ப்பாடம் நளவெண்பா - சுயம்வரகாண்டம்	425
4.	குன்றுடையானும் மக்களும் W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T.	428
5.	நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.	430
6.	பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா T. R. இராஜகோபால்	431
7.	அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E N. தணிகாசலமுதலியார் B.A. B.L.	433
8.	ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 2.) ஷேக்ஸ்பியர் நாடகம்	435
9.	வர்த்தமானம்	439

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 14.

ஈசன்தலையில் பாரத்தை வைத்து நாம் சும்மா விருப்பதல்லால் வேறொன்றும் உண்மையில் செய்யலாற்றா நிலைமைகள் சில நம்முடைய வாழ்நாளில் ஏற்படுகின்றன. அப்படிச் சும்மா இருப்பது சிற்சில சமயங்களில் இன்றியமையாததாவதுடன் நல்லது மாகுமென்பதில் ஐயமில்லை. எனினும், நம் ஆள்வினையினால் ஆற்றவல்ல நிலைமைகளும் பல உள. இப்பின்னைய நிலைகளில் ஈசன் செய்லென்று சும்மாவிருந்துவிடுதல், நம்முடைய சோம்பலும் மடைமையுமேயன்றி வேறன்று. தியாகம் என்பதன் திறத்திலும் இச்செய்தியைக் காணக்கூடும். நல்ல எண்ணம் சிறிது இருக்கலாம்; பிறர்க்கு உதவவேண்டும் என்னுந் தூண்டுதலுக்கு ஒருவாறு இணங்கலாம். எனினும், பிறர்க்குச் செய்யவல்ல உண்மையான உதவியாதென்பதைத் தேர்ந்துகொள்வதற்கு வேண்டிய கல்வியுங் கேள்வியும் நுண்ணறிவும் இருப்பதில்லை. இருக்கின்ற கல்வி கேள்வி அறிவுகளைப் பயன்படுத்தி ஆராய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யத் தலைப்படுமுன் சோம்பல் வந்து மூடிக்கொள்கின்றது. இதற்கிடையில், கல்லாதாரெல்லாருங் கோட்டிகொண்டு, தங்கள் அறிமையாலும், சிற்சிலவிடத்துத் தங்கள் சுயலாபங்கருதியும், "உன் உடல் பொருள் ஆவிகளைத் தியாகம் செய்துவிடுவதே கடன்" என்று வாயும் மனமும் ஒட்டாமல் வற்புறுத்தத் தலைப்படுகின்றனர். தாமாகச் சோதித்தறியுந் திறமையற்ற சனங்களுக்கு இத்தகைய சொற்கள் ஆவேசம் ஊட்டுகின்றன. இதனால் தம்வயர் துறந்து, செய்வதற்குரியன பற்பல இருக்க அவைகளை அறிதற்கியலாமல், செய்யத்தகாதனவற்றிற்குத் தம்மை முறைசெய்து தீர்கின்றனர்.

ஆரவாரமற்ற அமைதியுடன் ஒருவன் தன்னைத் தியாகம் செய்வது, மிகவும் அழகும் பெருமையும் வாய்ந்ததே. எனினும், அவ் வேளை தேடாமல் தானே வந்தடைதல் வேண்டும்; அதனுடைய நோக்கமும் பிறருடைய இன்பத்தைப் பெருக்குதல் ஆதல்வேண்டும். மற்று, தன் உயிர் உடல் முதலியவைகளைத் தியாகம் செய்வதே தன் வாழ்நாளின் முடிவாய நோக்கமாக வைத்து விவகரிக்குமிது அறிவுமன்று; பயனொன்றும் உடையது மன்று. ஆன்மாவின் அழகெல்லாம் தியாகம்செய்து தன்னைத் துறந்துகொள்ளவேண்டும் என்றவோர் ஆழ்ந்த ஆசையிலேயே அடங்கியிருக்கின்றதென நினைத்துநிற்றல் நேரிதன்று. ஏனெனில் ஆன்மாவின் செழிப்பும் அழகும், நம் வாழ்க்கையின்கண் நிலைத்த சக்தியின் உயர்விலும் பிரக்ஞையின் தெளிவிலுமன்றோ காணல்வேண்டும். முன்னிங்கு நாம் இவ்விதழ்களில் எடுத்துக்காட்டியபடி, தாயெண்ணம் ஒன்றுமில்லாமல், விழித்தியில் வாழ்க்கையில் வீழ்ந்துகிடக்கின்ற சனங்களில் எண்ணிறந்தோர், நுண்ணிய மெல்லிய நயமுடைய சொற்களாலும் செயல்களாலும் இயக்கப்படமாட்டாதவர்களாய், "உயிர்த்தியாகம்" என்னுமோர் உயர்குரல் முழக்கத்தினால்மட்டுமே உறக்கஞ் சிறிது நீங்கி உஞ்ஞற்ற வல்லவர்களாகின்றாரென்பது உண்மையே. ஆயினும் என்! இன்னவர்தாம், வேறு வகைகளில், தம் தரும வாழ்க்கையை நிறைவேற்றிக்கொள்ளுதற்குரிய அறிவும் ஆற்றலும் வீரமும் இல்லாதவர்களே. பிறர்பொருட்டு நம்முயிரையும் வாழ்க்கையும் நல்கிவிடுவது ஒருவாறு எளியதே; மற்று நம்முடைய ஆன்மவாழ்க்கையைப் பிறருடைய நன்மைபெருகும்

188970.

வண்ணம்முற்றிலும் நடத்தி நிறைவேற்றுவதே மிகவும் அரிது. இவ்விடயம்பற்றி மாரிஸ் மேடர்லிங்க் உரைக்கும் சில உயரிய வாக்கியங்கள் உட்கொள்ளத் தகுந்தன:—

It is easier far, as a rule, to die morally, nay, even physically, for others, than to learn how best we should live for them. There are too many beings who thus lull to sleep all initiative, personal life, and absorb themselves wholly in the idea that they are prepared and ready for sacrifice. The consciousness that never succeeds in travelling beyond this idea, that is satisfied ever to seek an occasion for giving all that which it has, is a consciousness whose eyes are sealed, and that crouches benumbed at the foot of the mountain. There is beauty in the giving of self, and indeed it is only by giving oneself that we do, at the end, begin to possess ourselves somewhat; but if all that we some day shall give to our brethern is the desire to give them ourselves, then we are surely preparing a gift of most slender value. Before giving, let us try to acquire; for the last is a duty wherefrom we are not relieved by the fact of our giving. Let us wait till the hour of sacrifice sounds; till then each man to his work. The hour will sound at last; but let us not waste all our time in seeking it on the dial of life.

சற்றேறக் குறைய இக்கருத்தையே உட்கொண்டு ஆங்கில அறிஞர் ஜான் ரஸ்கின் என்பவரும் பின் வருமாறு இயம்பியிருக்கின்றார்:—

"The will of God respecting us is that we shall live by each other's happiness and life; not by each other's misery or death. A child may have to die for its parents; but the purpose of Heaven is that it shall rather live for them; that not by sacrifice, but by its strength, its joy, its force of being, it shall be to them renewal of strength; and as the arrow in the hand of the giant. So it is in all other right relations. Men help each other by their joy, not by their sorrow. They are not intended to slay themselves for each other, but to slrengthen themselves for each other. And among the many apparently beautiful things which turn, through mistaken use, to utter evil, I am not sure but that the thoughtlessly meek and self-sacrificing spirit of good men must be named as one of the fatallest. They have so often been taught that there is virtue in mere suffering, as such......that they accept pain and defeat as if these were their appointed portion; never understanding that their defeat is not the less to be mourned because it is more fatal to their enemies than to them."

தற்காலம், உடல்வலிகருதாமல் அடிபட்டுஞ் சிறைசென்றும், உயிரெனில் அதனையும் ஒன்ருக மதியாமலும், தியாகங்கள் செய்கின்ற நன்மக்களை நினைக்குங்கால ஜான் ரஸ்கின்சொன்ன அவ்விறுதிவாக்கியம்நமது உள்ளத்தில் புதியதோர் பொருளுடன் அழுந்துகின்றது. எவருடைய வன்மையின்று சனங்களைக் காப்பதற்கென்று இவ்வகைத் தியாகங்கள் செய்யப் பெறுகின்றனவோ, அவர்களே இதனல் அதிகமும் கேடு அடைகின்றாரெனின் இப்படி அவர்தமைக் கெடுப்பது தருமமாகுமா என்பதைச் சிந்திக்க வேண்டாவோ! இந்தத் தியாகங்களினல் சனங்கள்தாம் அடையவல்ல நன்மைதான் எது வென்பது வேறு விடயம்! அதனையும், அரசிய லமை[illegible]ம் தனுதாய விதிகளும் மானுட இன்பத்திற்கு எள்ளளவேனும் உதவுவன அல்லவென்பதையும் இத்தலையங்கங்களில் பலவேறு இடங்களில் பல்வேறு வகைகளில், எமர்ஸன், ஸ்ரீ அரவிந்தர் முதலிய பெரியோர்தம் துணைகொண்டு ஆராய்ந்திருக்கின்றோம்.

நாம் தியாகிகள் ஆவதன்முன் நம்மை உத்தம தியாகத்திற்குரிய பொருள்கள் ஆக்கிக்கொள்ள வேண்டுமே. "உன்னைப்போல் உன் அயலானையும் நேசிப்பாயாக" என்பர். ஆம்! நம்மிடத்தே நாமே பயந்துபயந்து உறுதியற்ற அற்பநேயம் வைத்திருப்பவர்களாயிருக்கும்வரையில், மற்றவர்களையும் நாம் அப்படித்தானே நேசிப்போம். ஆதலின், அறிவின் தூய்மையோடு அகன்று முற்றிய நேயமுடன் நம்மையே நாம் மதித்து உவக்கும்வகையினைக் கற்றுக்கொளல் நம் முதற்கடன் ஆகின்றது. மற்றவர்பொருட்டு நம்மைத் துறக்கநினைப்பதன்முன் நம்பொருட்டே நாம் வாழும்வகை உணர வேண்டுமென்பது தக்கதே. கொடுக்குமுன் கொடுக்கத் தகுவனவற்றை ஈட்டவேண்டாவோ? ஆழ்ந்து நோக்குமிடத்து, அஞ்ஞானமுடைய நம்மைமுழுவதும் அளிப்பதைக் காட்டிலும், அணுவளவேனும் நாமே ஈட்டிக்கொண்ட மெய்ஞ்ஞானம் மற்றவரை எத்தனையோ வகைகளில் உய்விக்கவல்லதென்பதன் உண்மை புலப்படும். பயன்படும் உதாரமும் வஞ்சனையற்ற தாழ்மையும் உடையவர்களாவதற்கு நம்முள்ளே, உறுதியும் அமைதியும் தெளிவும் வாய்ந்த மெய்ஞ்ஞான ஒளி விளக்கை ஏற்றிக்கொள்வதற்குஏற்றனசெய்யவேண்டுவதன் அவசியத்தை மறந்துபோவோமெனின் நாமுங் கெட்டு நம்மை அடுத்தாரையுங் கெடுத்துவிடுவோம். நமக்குரியது இதுவாயின், பிறர்க்குச் செய்து வைப்பதற்குரியதும் இதுவன்றி வேறில்லை என்பதை விளம்பவும் வேண்டுமோ. இதற்காக நாம் நம் தியாகசிந்தனையையுங் கூடத் தியாகஞ் செய்துவிடலாம். ஏனெனில், தியாகமானது நம்மைப்பெருமைப்படுத்திஉயர்வடையச்செய்யும் வழிகளில்ஒன்று ஒருபோதுமாகாது. பெருமையுற நம் ஆன்மா உயர்ந்ததற்கோர் அறிகுறியே நம் தியாகங்கள் ஆதல்வேண்டும். இயேசு கிறிஸ்து சிலுவையி லேறியதால் உயர்ந்தவரல்லர்; அவர் உயர்ந்தவராதலால் சிலுவையி லேறினர். திருமால் திருமாலாயிருப்பதாற்றன், தன்னையே தமர்க்கு நல்குந் தனிப்பெரும் பொருளாதற் குரியவராகின்றார். இரக்கம் தன்னலமறப்பு அன்பு முதலியவைகள் நம்முடைய வாழ்க்கையின் வேர்களாயமைவதுபோக, உறுதியும் அமைதியும் வாய்ந்த நம் சித்தகத்தில் பூத்தமலர்கள் ஆதல் வேண்டும். அப்பொழுதே இணையில்லாவோர் பேருண்மையின் தூநறுந் தெய்வ வாசனை உலகெங்கு பரவுதல் கூடும். நம்மைப்போல் அயலாரை நேசிப்பதனினும், நம்மையே அயலாரிற் கண்டு நேசிக்கவல்லவராகின்றதன்மையே கடவுளிற்கு நிகரான புனிதமும்பெருமையும் வாய்ந்தது. விரைந்தலைகின்றவர் இதனை அறியார்; அமர்ந்து வாழ்கின்றவர்களே உணர்வார்.

நாம் உயரவுயர நம்மைச் சூழ்ந்திருப்பவர்களையும் உயர்த்துகின்றவர்கள் ஆகின்றோம். நம்முடைய நிலைமையைக்கண்டு நாமே இரங்கலாமோ. "ஐயோ பாவம், நான் எத்துணை ஏழை; எவ்வளவு துன்பங்களுக்கு நான் ஆளாகியிருக்கின்றேன்" என்று ஒருவன் மனமிரங்கிப் பரிவானுயின் அவனைப்பற்றி என்ன நினைப்போம். இதற்கெதிர், "இத்துணைத் துன்பங்கள் என்னை வருத்தினும், நான் அத்துன்பங்களையே தூய்மைசெய்து உயர்கின்றேன் பார்" என முயல்வதன்றோ வீரம். இவ்விதமே மற்றவர்களையும் தத்தம் துயரத்தால் தூய்மையடையும்படி கற்பிப்பதே உண்மையான உதவி. இதனைச் செய்யுங்கால் ஒவ்வொரு வேளை நாம் பிறருக்குக் கொன்று கொடுப்பதுபோக, பிறரிடத்திலிருந்து சிலவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாயினும் ஆகலாம். உண்மையில் இது இரத்தலே போல்கின்றவோர் ஈகையாய் மாறிவிடும்; மற்றபடி இரக்கமுடன் செய்கின்ற தியாகங்களிற் பல ஈதலே போல் இரக்கின்ற செய்திகளாய் முடிகின்றன.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[417-வது பக்கத் தொடர்ச்சி]

தன்னையே பிறரிற் கண்டு வெறுப்பவர் தன்மை யீதே.

முன்னர் உள்ளுறை நகையின் வெள்ளைக் குருத்தெழுகின்றதென்ன அரக்கியின் அருத்தியைக் கண்டு புன்முறுவல் பூத்த கொண்டல், அன்னுள் செருக்கினை இகழ்ந்து மின்னி இடித்ததேபோல் வாளெயிறிலங்க நகுகின்ற ஒலி கேட்டோ, மற்று, தன் மணுளனைப் பிரிந்திருந்த நேரம் பெரிதென்ற பரிவினலோ, பெண்ணிடை யரசி சீதாபிராட்டி பர்ணசாலை நீங்கி அவ்வயின், மின் நடைகற்பதுபோன்று மெல்லென மெல்லென ஒல்கிவருதலும்,

ஊன்சுட வுணங்கு பேழ்வாய்
உணர்விலி உருவ நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம்
வந்திடை வயங்க நோக்கி
மீன்சுடர் விண்ணு மண்ணும்
விரிந்தபோ ரரக்க ரென்னுங்
கான்சுட முளைத்த கற்பின்
கனலியைக் கண்ணிற் கண்டாள்

[தசையைப் பதஞ்செய்து சுடுகை மாறுமுன் சுவையுடன் உண்ணப் பதைக்கின்ற பிளந்த வாயையுடையவளும் உணர்வு இல்லாதவளுமாகிய சூர்ப்பணகை—சீதையின் வடிவினின்று வீசுகின்ற மிக்க பிரகாசமுடைய ஒளியின் வெள்ளம் வந்து அங்கு விளங்குவதை நோக்குமளவில், நக்ஷத்திரங்கள் விளங்கும் ஆகாயத்திலும் பூமியிலும் பரவியுள்ள போர்த்தொழில் வல்ல அரக்கரென்னும் காட்டை எரித்தழிப்பதற்குத் தோன்றிய கற்பு எனும் நெருப்பை (சீதையை) தன் கண்களாலே கண்டாள்.]

பேழ்வாய் உணர்விலி கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள். கண்டவளவில், இப்பேரழகி யாவளெனும் ஐயம் பிறந்திருத்தல் வேண்டும் "மருவொன்று கூந்தலாளை வனத்திவன் கொண்டு வாரான்" ஆதலின் இப்பெருமகன் மனையாட்டி யல்லளென எண்ணினுள். மற்று, அரவிந்த மலர்நீங்கி அடியிணை படியில் தோயத் திருவே இங்கு வருவாள்கொல்லோ என வியந்து அச்சூர்ப்பணகை சீதாபிராட்டியை,

பண்புற நெடிது நோக்கிப்
படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை
யில்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா
கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றா
லென்படும் பிறருக் கென்றாள்

[அமைதியாக முழுதும் பார்த்து, "படைப்பவர்தம் திறமையின் குறைவேயன்றி, மனதிலே தோன்றித் திகழ்கின்ற அழகு என்னும் அர்த்தத் தத்துவத்திற்கு எல்லை என்பது ஒன்றும் இல்லை" என்று எண்ணித் திகைத்து நின்றனளாய், "பெண்ணுய்ப் பிறந்த எனக்கே, கண்கள் வேறொரு பொருளிலுஞ் செல்லமாட்டா, கருத்தோ எனில் அதுவும் அவ்வாறே, என்றால்—இவளைக்கண்ட ஆடவர் கருத்தும் கண்ணும் என்ன பாடுதான் படுமோ"—என்றாள்].

என்று இராமனையுஞ் சீதையையும் அடுத்தடுத்து நோக்கினுள். ஆடவ ரழகிற்கு எல்லை இவனென்றால் பெண்டிர்தம் அழகிற் கெல்லை யவளென்று துணிந்தனள். உருவும் திருவும் குலனும் கல்வியும் ஒக்க அமைவதோடு அழகின் வரம்பாகும் அமைதியுமன்றி வேறு ஒன்றிரண்டு பொருத்தங்களின் புதுமையும் இவ்விராமனுக்குஞ் சீதைக்கும் இடையே இருந்ததுபோலும். "எழுத அரு மேனியான்," என்றும், "ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தோன்" என்றும் இவ்விராமன் வியக்கப்பெறுவதற் கொக்க,

ஆதரித் தமுதிற் கோல்தோய்த்
தவயவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைப்ப தல்லால்
மதனற்கு மெழுத வொண்ணுச்

சீதை என்று இவளைக் கம்பர்பிரான்முன்னரேவியந்து வருணித்திருக்கின்றமையால்,வரைதற் கருமைபாகுந் தன்மையினும் இவ்விருவரும் பொருத்தமுடையவராகின்றார். சீதையைக்கண்ட பெண்ணும் சூர்ப்பணகையே கண்ணுங்கருத்தும் பிறபொருளிற் செல்லாதவாறு கவரப்பெற்று இனி ஆடவர் நிலை என்னும் என அதிசயித்ததுபோல், தன்னையோர் தலைவியாய் அமைத்துக்கொண்ட பிள்ளைபெருமாள் ஐயங்கார்,

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டால்மன் மதனுமட [கே
வாராக வாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ணமெங்
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே

[வராகாவதாரம் எடுத்தவனே, வாமனுவதாரம் எடுத்தவனே, திருவரங்கத்தில் எழுந்தருளி யிருப்பவனே, வட்டமான உருளைகளையுடைய தேரோட்டும் பாகனுய் அருச்சனனுக்கு அமைந்தவனே, இராகவா, உன் அழகைக் கண்டால் மன்மதனும் ஒரு பெண்ணுகி உன்னை அடைவதற்கு ஆசைப்படுவான் என்றால், மார்பில் தங்கிய வாருடைய முலையுடைய என்போன்ற மாதருக்கு, (உன்னைக் கண்டபின்னும்) பிழைக்கும் வழி வேறுளதோ]

என்று மயங்கியமையால் சீதையும் இராமனும் தன் தன்பாலார் காதலுக் கிலக்காகுந் தன்மையினும் ஒரு சிறப் பொருத்த முடையோராகி நிற்கின்றனர்.

இனி, சீதைக்கு இராமனேடிருந்த உறவு எத்தகைத்தெனச் சிந்திப்பாள் இவ்வரக்கி. மனிதர் கற்பித்துக் கொள்ளுங் காரணங்களின் வன்மையும் நன்மையும்

அவரவர் விருப்புவெறுப்புக்களையே பொருந்தியிருக்கின்றன. தம் விருப்பிற்கிசைந்த முடிவினை முதலாக்கிப் பின் அதற்குவேறோர் காரணந்தேடப் புகுங்கால் அக் காரணந்தான் மிகவும் அற்பமா யிருக்குமென்பதில் ஐயமில்லை. இப் பேரழகி இராமனுக்கு வாய்த்த நன்மனைவியா யிருப்பாளாயின், பின் தான் காட்டும் காதல்மொழிகளொன்றும் அவன்பாற் செல்லாதென்பது நன்கறிவாள் சூர்ப்பணகை. ஆதலின், அவள் மனைவியா யிருக்கலாகா தென்பதே இவள் விருப்பம். இவ்விருப்பத்திற் கிணங்க நொய்ய காரணங்களை நூற்பவளாகி முன், "மருவொன்று கூந்தலாளை வனத்திவன் கொண்டு வாரான்" ஆதலின் மனைவியல்லள் என வலிந்து மதித்தனள். தத்தம் காரணங்களின் நொய்ம்மையைத் தம்மினும் அதிகமாய் அறியவல்லார், யார்? இச் சிறுதுரும்பு பற்றப் போதாதென்று அவள் உள்ளத்தை உறுத்தியது. எனின், அதற்குப் பின்னுமோர் வலிவுசெய்யப் புக்குழலுமிவள்,

> பொன்னைப்போன் பொருவின் மேனிப்
> பூவைப்பூ வண்ணத் தானிம்
> மின்னைப்போ லிடையா ளோடு
> மேவுமெய் யுடையா னல்லன்
> தன்னைப்போற் றகையோ ரில்லாத்
> தளிரைப்போ லடியி னாளை
> மென்னைப்போ லிடையே வந்தா
> ளிகழ்விப்பெ னிவளை யென்று

[காயாமலர்போன்ற கரிய நிறத்தையுடைய இவன், பொன்போன்ற நிறமேனியையும் மின்னலைப்போன்ற இடையையும் உடைய இவளோடு பொருந்தத்தக்க சரீர அமைப்பு உடையவன் அல்லன். (ஆதலால் இவள் அவன் மனைவியாவதற் கியலாது) எனின், தனக்கு நிகரான அழகுடையோர் வேறு இல்லாதவளும், தளிரைப்போன்ற பாதங்களையுடையவளுமாகிய இவளும் என்னைப்போலவே இவன்பால் ஆசையால் இடையில் வந்த ஒருத்தி யாதல் வேண்டும். இவனைக்கொண்டு அவளை இகழ்விப்பேன்—என்று எண்ணி]

> வருமிவண் மாயப் வல்லள் வஞ்சனையரக்கி நெஞ்சந்
> தெரிவிலடோறுந்தன் மைசீரி யோய்செயலிற்றன் று
> துருவி துமெய்யதன் று லூ னுகர்வாழ்க்கையாளை
> வெருவினெனெய்திடாமல்விலக்குதிவீர வென்றாள்

[இங்கு வருகின்ற இவள் மாயைகளில் வல்லவள். வஞ்சனை புரியவந்த ஓர் அரக்கி. ஆழந்தெரியமாட்டா நெஞ்சக் கருத்துடையவள். சீரியோய், இவளுடைய உண்மைத்தன்மையை எளிதில் தெரிந்துகொள்வதென்பது இயலாது. இவள் கொண்டுள்ள இவ்வுருவம் மெய்யன்று. ஊனை உண்டு வாழ்கின்ற இவளைக் காணவும் அஞ்சுகின்றேன். ஆகையால், வீரனே, இவளை இவ்விடம் வராமல் விலக்கிவிடு" என்றாள்]

'என்னைப்போ லிடையே வந்தாள்' எனச் சீதையை சிறுதிரையில் எண்ணியவிது சூர்ப்பணகைக் கியற்கையே. எதிர்ப்பட்டோரெல்லாம் துரியோதனன் கண்களுக்குத் துரியோதனர்களாயும் தருமன் கண்களுக்குத் தருமர்களாயும் தோன்றுவதன்றி வேறொன்றும் நிகழ்தலரிது. இதுவுமன்றி "இடைவந்த குடிகேடி" என்று சீதையின் தன்மைகளைச் சொல்லப்புகுந்த பொய்களத்தனையும் சூர்ப்பணகை தன்னிடத்தினின்றே பெற்றுக்கொண்டா ளல்லது அவைகளுக்குப் பிறப்பிடம் வேறெங்குமில்லை. தன்மையைப் படர்க்கை வாசகமாக மாற்றிச் சீதையுடன் சார்த்தியதோடு சூர்ப்பணகையின் சூழ்ச்சியவ்வளவும் முடிந்தது. இங்கு, உருமாறிப் புனைவேடம் பூண்ட வஞ்சமகளாய், தீவினை தீயநோற்றுத் தன் பழிபடு பிறவியை நீங்கினாள்போல் போந்த இந்த எவ்வுயிரு மிட்டதோர் வயிற்றினள், தன்னைப்போல், குயில்தொடர் குதலையோர் கொவ்வைச்செவ்வி வாய் பயில்தொடர் இயலியாய் மருவிய சானகியை இகழ்விக்கும்படி பழிக்கவேண்டுமெனின், தன்னுடைய வேடத்திற் கரந்திருக்கும், மாயவஞ்சனைகளையும் நெஞ்சத்து நஞ்சினையும் பொய்யுருவையும் ஊனுகர் வாழ்க்கையையும் வெருவுறவரவையும், அவளுக்குச் சேர்த்துவிட்டாற்போதுமெனச் சிந்தித்தனள். இந்தக் காமவல்லி "நாகரிக ஒப்பாரியாய்" வந்தமையால் வெளிப்படையாய்க் காணமாட்டாத் தன்மைகளை வைத்துப் புனைந்த பொய்களைப் பகர்ந்தனள். வான்மீகத்தில் வஞ்சனையின்றி அரக்கியின் உருவமே தாங்கிச் சரிந்த வயிறுடைய முதியோளாய்வந்த சூர்ப்பணகை "வெகு விகாரமும் அவலக்ஷணமுமுள்ள சீதை உங்களுக்குச் சரியான மனைவியல்லள்......இந்த அழகற்ற கெட்ட நடக்கையுள்ள சரிந்தவயிறுள்ள கிழவியை மனைவியாக அடைந்திருக்கிறபடியால் தாங்கள் என்னிடம் அன்பற்று இருக்கின்றீர். மனுஷியாகிய இப்பேதையை நானிதோ தாங்கள்பார்த்துக்கொண்டிருக்கப் புசித்து விடுகிறேன். அதன்பிறகு சக்களத்தி பயமின்றி நான் தங்களுடன்கூடச் சுகமாக வாழ்கிறேன்" என்று உரைத்ததும் நாகரிகப் பூச்சொழிந்த உண்மையேயாகும். தன்னைப்போல் விகாரமுள்ளவள சீதையும் என அவள் கண்ணவியக் கூறினாள். தன்னைப்போல் வஞ்சனையுடைய மாய உருவினள் சீதை என இவள் மதி அவியக் கூறினாள். இவ்வளவே வேற்றுமை. மேலும், தான் இராமனை மணந்து மனைவியாய் வாழவேண்டுமென்னும் எண்ணத்துடன் வந்தவளாதலின் அப்பண்டைய அரக்கி சீதையையும் வாழ்க்கைப்பட்ட மனைவியே என்று அறிந்தனள். தற்காலக் காமவல்லி, காமச்சேர்க்கை தோழமணம் அனைய சிறு உறவே கருதினாளதலின் சீதையையும் அன்னவர்களுள் ஒருத்தியாக மதிக்கப் புக்கனள்.

இவைகளைக்கேட்டான் இராமன். இபற்கையைஉருவத்தால் மறைக்கலாமேனும் உரைகள்புக்குக் காட்டிவிடும் விந்தையைச் சிந்தித்து,

> [மீட்டார்
> ஒள்ளிதன் னுணர்வுமின்னே புன்னையா ரொளிக்கு
> தெள்ளிபகலத்திறலுஞ் சிந்தனை தெரிந்ததம்மா
> கள்ளவல்லரக்கிபோலாமிவளை நீகாண்டியென்றெ
> வெள்ளிபமுறவன்முத்தம்வெளிப்படவீரனக்கான்

[மின்னல் போன்றவளே, உன் அறிவு மிகவும் விளக்கமாக இருக்கின்றது. உனக்குத் தெரியாமல் ஒளிந்திருக்க வல்லவர் யார்? உன்னுடைய எண்ணம் இன்னதென்பது நன்றாகத் தெரிந்தது. வஞ்சனையுடைய கொடிய அரக்கியே போலும் இவள். நீயே பார்—என்று, வெண்மையான முத்துக்கள்போன்ற பற்கள் தோன்ற வீரனாகிய இராமன் சிரித்தான்]

அவ்வொள்ளிய உணர்வினட்கு இது வஞ்சப்புகழ்ச்சியென் றறியுமா றிலைபோலும்,

> ஆயிடை யமுதின் வந்த வருந்ததிக் கற்பி னஞ்சொல்
> வேயிடை தோளினாளும் வீரனைச் சேரும்வேலை
> நீயிடை வந்த தென்னை நிருதர்தம் பாவை யென்னுக்
> காயெரி யனைய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும்.

[அதற்குள், தேவாமிருதத்துடன் வந்தவளும், அருந்ததி போன்ற கற்புடையவளும், அழகிய சொற்களையும் மூங்கிலும் நிகராகாத தோள்களையுடையவளும் ஆகியசீதை இராமனுக்கருகு நெருங்குதலும், "ஏ அரக்க மகளே, தனித்திருக்கும் எங்களுக்கிடையே நீ என் வந்தாய்" என்று எரிகின்ற நெருப்பினைய வஞ்சனை பொருந்திய உள்ளத்தையுடைய சூர்ப்பணகை கோபித்து அதட்டவும்]

> அஞ்சின ளஞ்சி யன்ன
> மின்னிடை யலசவோடிப்
> பஞ்சிமெல் லடிக ணோவப்
> பதைத்தனள் பருவக் கால
> மஞ்சிடை வயங்கித் தோன்றும்
> பவளத்தின் வல்லி யென்னக்
> குஞ்சர மனைய வீரன்
> குவவுத்தோ டழுவிக் கொண்டாள்

[அன்னம் போன்ற சீதை அஞ்சினள், அஞ்சித் தன்மின் போன்ற இடைதுவள ஓடி, பஞ்சுபோன்ற மெல்லிய அடிகள் வருந்தப் பதைத்து, கார்கால மேகத்தின் நடுவில் விளங்கித் தோன்றும் பவளக்கொடி என்ன, யானை போன்ற இராமனது திரண்ட தோள்களைத் தழுவிக் கொண்டாள்]

இப்பொழுதுதான் விளையாட்டு வினையாயு முடியுமென்பதை ஓர்ந்தான் போலும் இவ்வீரன் அவளை விலக்க வேண்டுவதன் தகுதி நோக்கினன். எனினும் உண்டாட்டங் கொண்டதெல்லாங் கொண்டுவிட்டுப் பின் தானே நடிந்தகற்றினால் அவள்மனம்உளையுமென்றிரங்கியோ,

> உளையன இபற்றல் ஒல்லை உன்சிலை உணரு மாயின்
> இளையவன் முனியும் நங்கை ஏகுதி விரைவில்

என்று தம்பியின் முனிவைச் சொல்லி அவளை அகலச் செப்பினான். ஆசைதான் வெட்கம்போல் பயத்தையும் அறியாது. ஆதலின்,

> பொற்புடை யாக்கி பூவிற் புனலிற் பொருப்பில் வாழு
> மற்புடை யுள்ளத் தாரு மநங்கனு மமரர் மற்று
> [தென்னை
> மெற்பெறத் தவஞ்செய் கின்றா ரென்னைநீ யிகழ்வ
> நற்பொறை நெஞ்சினில்லாக் கள்வியைநச்சி யென்றாள்

[அழகுடைய அந்த அரக்கி, இராமனை நோக்கி, "தாமரையிலும் பாற்கடலிலும் இமயமலையிலும் வாழும் அன்புடை உள்ளத்தவர்களாகிய பிரமன் திருமால் பரமசிவன் என்பவரும், மன்மதனும், மற்றுமுள்ள இந்திராதி தேவர்களும் என்னை அடைவதற்குத் தவஞ் செய்கின்றனர். அவ்வாறிருக்க நெஞ்சில் நல்லகுணம் தங்காத இப்பெண்ணை விரும்பி என்னை நீ அலட்சியஞ் செய்வது தகுமோ"—என்றாள்]

இதன்மே லொன்றும் பரிகசிக்கும் நிலையினில்லை இராமன். சீதையை உடன்கொண்டு பர்ணசாலையைச் சென்றெய்தினன்.

தமிழ்ப் பாடம் 22.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[405-வது பக்கத் தொடர்ச்சி]

> பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
> காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாச
> மலர்ந்ததேங் கோதையா ளாழ்துயரத் தோடு
> புலர்ந்ததே யற்றைப் பொழுது. 114.

பதப்பிரிவு:—பூசுரர்தம் கை மலரும் பூ குமுதமும் முகிழ்ப்ப காசினியும் தாமரையும் கண் விழிப்ப வாசம் அலர்ந்த தேன் கோதையாள் ஆழ் துயரத்தோடு புலர்ந்தது அற்றை பொழுது.

பதவுரை.

பூசுரர்தம் - பிராம்மணர்களுடைய
கை - கைகளாகிய
மலரும் - மலர்களும்,
பூ - அழகிய
குமுதமும் - குமுத மலர்களும்
முகிழ்ப்ப - குவிந்துகொள்ளவும்;
காசினியும் - உலகிலே உள்ள ஜனங்களும்
தாமரையும் - தாமரைகளும்
கண் - கண்களை
விழிப்ப - திறக்கவும்,
அற்றைப்பொழுது - அன்றையகாலம்
வாசம் - வாசனை
அலர்ந்த - வீசுகின்ற
தேன் - தேனையுடைய
கோதையாள் - மாலையுடைய தமயந்தியினது
ஆழ் - ஆழ்ந்த
துயரத்தோடு - வருத்தத்தோடு
புலர்ந்தது - விடிந்தது.

விளக்கம்:—புலர்ந்தது - விடிந்தது (பயனிலை). எது புலர்ந்தது? அற்றைப்பொழுது - அன்றை இரவுக் காலம் (எழுவாய்). அற்றைப்பொழுது எதனோடு கூடச் சேர்ந்து விடிந்தது? துயரத்தோடு - வருத்தத்தோடு. எப்படிப்பட்ட துயரத்தோடு? ஆழ் துயரத்தோடு. யாருடைய வருத்தமும் அன்றிரவும் ஒன்றாய் விடிந்தன? கோதையாள் ஆழ்துயர் - மாலையை அணிந்த தமயந்தியினுடைய ஆழ்ந்த துயரம். அந்த மாலை எதை உடைய மாலை? தேன் கோதை - தேனையுடைய மாலை. அந்தத் தேன் எப்படிப்பட்டது? அலர்ந்த தேன் - வீசுகின்ற தேன். எதை அலர்ந்த தேன்? வாசம் அலர்ந்த தேன் - வாசனை வீசுகின்ற தேன்.

என்ன என்ன உடன்நிகழத் தமயந்தியின் துயரமும் இரவும் விடிந்தன? முகிழ்ப்பவும் விழிப்பவும்—சில மூடிக்கொள்ளவும் சில திறக்கவுமாகப் பொழுது விடிந்தது. எவை முகிழ்ப்ப? கைம்மலரும் குமுதமும் முகிழ்ப்ப. எப்படிப்பட்ட குமுதம் அது? பூ குமுதம் - அழகிய குமுதம். யாருடைய கைம்மலர்? பூசுரர்தம் கைம்மலர் - (சந்தியாவந்தனம் முதலிய செய்யுங்கால் குவிகின்ற) பிராம்மணர்களுடைய கையாகிய மலர்கள். சூரியோதயத்தில் மூடிக்கொள்வன அவையாயின் கண் திறப்பன எவை? காசினியும் தாமரையும் - பூலோகத்திலுள்ளவர்களும் தாமரைமலர்களும்.

விரிவுரை:—முன்னைய செய்யுளில் "ஆருயிர்க்கும் உண்டோ அரண்" என்று நாம் அடைந்த சந்தேகத்தைக் கவி, இரவினால் அவள் பட்ட துயரங்கள் அவ்விரவுவிடியக் கூடவே விடிந்தன என்று கூறித் தெளிவிக்கின்றார். சூரியோதயம் ஆகின்றது. அப்பொழுது மூடிக்கொள்வது இரண்டு, திறப்பது இரண்டு, விடிவது இரண்டு. சூரி[illegible]செய்கின்ற அந்தணர்களுடைய [illegible]மலர்களும்

(இந்தப்பூ இரவில் மலர்ந்து காலையில் மூடிக்கொள்ளும்) குவிந்துபோகின்றன. துயில்நீங்கிய நகரமாந்தர்களின் கண்களும் தாமரைமலர்களும் (தாமரை இரவில் குவிந்திருந்து காலையில் மலருப) திறக்கின்றன. இரவுப்பொழுதும் தமயந்தியின் துயருப் விடிகின்றன.

சுரர் என்றால் தேவர்கள் என்று அர்த்தம். வானத்தில் இருக்கும் தேவர்களைப்போல் பிராம்மணர்களைப் பூமியில் இருக்கும் தேவர்களாகக் கருதியதால் அவர்களுக்குப் பூசுரர் என்ற பேர்வந்தது. வில்லிபுத்தூரார் விண்ணவர்களை மாதேவர் என்றும் அந்தணர்களைப் பூதேவர் என்றும் அழைப்பார்.

பரசுராமர் இந்தப் பூமியைக் காசிபருக்குத் தானமாய் அளித்தார். ஆகையால் பூமிக்குக் காசினி என்ற பேர் வந்தது.

குறிப்பு:—இதுவரையில் கற்ற இலக்கணங்களில் சிலவற்றை இங்கு நினைவுபடுத்திக்கொள்வது நலம்.

1. முகிழ்ப்ப, விழிப்ப என்பன இரண்டும் வினையெச்சங்கள். இவை, புலர்ந்தது என்னும் வினைமுற்றைத் தொடர்ந்து முடிகின்றன. வினையெச்சங்கள் காரணம் காரியம் உடனிகழ்ச்சி என்ற மூன்று பொருள்களில் வரும் (65-வது பக்கம்). இங்கே, பொழுது புலர்ந்தால், கையும் குமுதமும் முகிழ்த்தலாகிய காரியம் உண்டாயின என்று கொண்டு, முகிழ்ப்ப என்பது காரியப்பொருளில் வந்த வினையெச்சம் என்று அறியலாம். விழிப்ப என்பதும் அவ்வாறே. அல்லது, முகிழ்ப்பது விழிப்பது ஆகிய இரண்டு காரியங்களும் புலர்தலாகிய செய்கையோடு ஒன்றாய் நிகழ்ந்தன என்பதைக் குறிப்பதாகக்கொண்டு, இவை உடன்நிகழ்ச்சிப்பொருளில் வந்தனவாகவும் சொல்லலாம்.

2. காசினி, என்றால் இந்தப் பூமி. இவ்விடத்தில் அது பூமியைக் குறிக்கவில்லை; ஏனென்றால் பூமி கண் விழிக்காது; ஆதலின், பூமியிலுள்ள ஜனங்களைக் குறிக்கின்றது. இப்படி ஒருபொருளின் இயற்கையானபெயர் அந்தப்பொருளைக் குறிக்காமல் வேறுஒருபொருளாகி வருமானால் அதனை ஆகுபெயர் என்பர் (46-வது பக்கம்). பலவித சம்பந்தங்களால் ஒரு பெயர் மற்றொன்றிற்கு ஆகலாம் உவமையாகுபெயருக்கும், குணவாகுபெயருக்கும் உதாரணம் காட்டியிருக்கிறேன். இங்குக் காசினி என்னும் இடப்பெயர் இடமாகிய பூமியைக் குறிக்காமல் பூமியிலுள்ள ஜனங்களுக்குப் பதிலாக நிற்பதால் இது இட ஆகுபெயர். அப்படியே, ஊர் சிரிக்கும், உலகம் மகிழும், என்று சொல்லும்போது, ஊர் உலகம் என்பன இடவாகுபெயர்கள்.

3. ஒன்றுபோல் மற்றொன்று இருந்தது என்று வருணித்தால் உவமையணி என்றும், ஒன்றே மற்றொன்று என்று சாதித்தால் உருவக அணி (34, 143, பக்கங்கள்) என்றும் முன்னமே இங்குப் பல இடங்களில் காட்டியிருக்கின்றேன். கைம்மலர், என்பது கை ஆகிய மலர் என்று விரியுமாதலால் இது உருவக அணி. மலர்க்கை என்றிருக்குமானால், மலர் போன்ற கை, என விரிந்து உவமையணி யாகும்.

4. இடைச்சொல்லின் இலக்கணத்தைச் சிறிது முன் குறித்துள்ளேன். (364-வது பக்கம்.) ஏ என்பது ஓர் இடைச்சொல். இடைச்சொற்கள், பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சேர்ந்துகொண்டு பல பொருள்களைத் தரும். அவைகளில் தேற்றம் என்பதும் ஒரு பொருள். அதாவது, தெளிவுபொருளுடையத்தைச் சந்தேகமில்லையென்று நிச்சயப்படுத்தல். கொடுத்த கடனைத் திருப்பிக்கொடுக்கின்ற வழக்கமில்லாத ஒருவன், ஒருசமயம் திருப்பிக்கொடுத்துவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். இதை இன்னொருவனுக்குச் சொல்லும்போது அவன் தான் நம்புவானோ நம்பமாட்டானோ என்ற சந்தேகத்தை முன்னிட்டு அதை விலக்குவதற்காக, "அவன் கொடுத்து விட்டானே கடனை" என்று ஒரு ஏகாரம் சேர்த்துத் தேற்றுவோம். இது தேற்றப் பொருளில் வந்தது. அப்படியே, முன்செய்யுளில் 'உண்டோ அரண்' என ஓகார இடைச்சொல் விளைத்த சந்தேகத்தை இங்குப் புலர்ந்ததே என்பதிலுள்ள ஏகாரம் விலக்கித் தேற்றப்பொருளில் வந்திருக்கிறது.

வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கிழியத் தோன்றினன்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று. 115.

பதப்பிரிவு:—வில்லி கணை இழப்ப வெண் மதியம் சீர் இழப்ப தொல்லை இருள் கிழிய தோன்றினன் வல்லி மண மாலை வேட்டு இடும் தோள் வாள் அரசர் முன்னே குணவாயில் செம் கதிரோன் குன்று.

அன்வயம்:—வில்லி கணை இழப்ப, வெண்மதியம் சீர் இழப்ப, தொல்லை இருள்கிழிய, வல்லி மணமாலை வேட்டிடு வாளரசர் முன்னே, செம்கதிரோன் குணவாயிற் குன்று தோன்றினன்.

பதவுரை.

வில்லி - வில்வித்தை வல்ல மன்மதன்
கணை - தன்னுடைய பாணங்களை (பயனற்று)
இழப்ப - இழக்கவும்,
வெண் - வெண்மையான
மதியம் - சந்திரன் (ஒளியற்று)
சீர் - தனது சிறப்பை
இழப்ப - இழக்கவும்,
தொல்லை-(இரவுமுழுதும் இருந்து) பழமையான
இருள் - இருட்டானது
கிழிய - கிழிந்து அகலவும்,
வில்லி - கொடிபோன்ற தமயந்தியின்
மணமாலை - சுயம்வரமாலைக்கு
வேட்டிடு - ஆசைப்படுகின்ற
தோள் - தோள்களையுடைய
வாள் - பொலிவு பொருந்திய
அரசர் - அரசர்களுக்கு
முன்னே - எதிரே,
செம் - சிவந்த
கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன்
குணவாயில் - கிழக்குத்திசையில் இருக்கின்ற
குன்று - உதயகிரியாகிய மலையில்
தோன்றினன் - தோன்றினன்.

விரிவுரை:—இச்செய்யுள் சூரியோதய மாயிற்றென்று செப்புகின்றது. இருள்பிரிந்து வெளிச்சம் வருகின்ற வைகறையில் நிகழ்ந்தனவற்றை முன்செய்யுளிலும் சூரியன் தோன்றுங்கால் நிகழ்வனவற்றை இச்செய்யுளிலும் காண்கின்றோம். மன்மதனுடைய ஆட்சி இரவிற்றான் செல்லுமாதலால் வில்லி கணை இழந்தான் என்றார்.

இக்கவி, காமநோய் உற்றவள் நிலையைப்பற்றிப் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் சந்திரனைக் குறித்துத் தான்

ஓரிடத்தில் சொன்னதை மற்ற இடத்தில் மறந்து ஒன்றிற்கொன்று முரண்படப் பாடுவாராயினர். 90-வது செய்யுளில் அந்திமாலையிலே பல்லைப்போல் பிறைச் சந்திரன் தோன்றி வந்தது என்றபடியால், அது முன் நிலவுக் காலமாக இருத்தல்வேண்டும். முன்னிரவில் பல்லைப்போல் காண்கின்ற பிறைச்சந்திரன் மேற்கே தான் தெரியும். தெரிந்து சிலகாலம் இருந்து மறைந்து விடும். பிறகு, கொள்ளிக்கு விள்ளாத கூரிருள் ஏழுலகும் சூழ்ந்து கருவிக்கும் நீங்காத காரிருளாகி, விழுது படத்திணிந்து கழுதும் வழிதேடும்படி கங்குல் இருந்ததென்றால், சூரியோதய காலத்தில் சந்திரன் வானத்தில் இருந்திருக்க முடியாது. எனினும் புகழேந்திப் புலவர், வெண்மதியம் சீர் இழப்ப (ஒளிமழுங்க) சூரியன் தோன்றினன் என்று அவ்விரவின் செய்தியாகவே கூறுகின்றது வியப்பைத்தரும். ஓரே இரவில் அமாவாசைக்குப்பின் நேர்கின்றதையும் பௌர்ணமிக்குப் பின் நேர்வதையும் கலந்துவிட்டார். ஒட்டக்கூத்தர் இதுபற்றிக் கேட்டிருந்தால் நம் கவி என்ன உத்திரந் தந்திருப்பாரோ, அறியேன்.

குறிப்பு:—1. வல்லி, என்பது தமயந்தியை உவமையால் குறிப்பதால் உவமையாகுபெயர்.

தமயந்தியின் மாலைக்கு வீணாசைப்பட்டு வருகின்ற மன்னவர்களைக் கண்டு சிரித்துச் சிரித்துத் தன் முகம் சிவந்தனன்போல் சூரியன் தோன்றினன், என்னும் பொருள் செங் கதிரோன், என்னும் குறிப்பில் அடங்கியிருக்கின்றது.

முரைசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரை
மாலை துவள முடிதயங்க வால்வளையுங் [செறிந்த
காலை முரசுங் கலந்து. 116

பொழிப்புரை:—முரசு அடித்துச் சுயம்வரம் தெரிவித்த ஏழுநாளும் முடிந்தபின், மலையொத்து வெற்றி தங்கித் திகழும் தோள்களையுடைய அரசர், வாசனை அமைந்த தம் மாலைகள் அசையவும் கிரீடங்கள் பிரகாசிக்கவும், வெண்சங்கும் காலை முரசும் கலந்து ஒலிக்கவும் சுயம்வரமண்டபம் வந்து சேர்ந்தார்.

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல—முன்றிற்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். 117.

பதப்பிரிவு:—மன்றல் அம் தார் மன்னர் நடு அணைய வந்து இருந்தான் கன்று குதட்டிய கார் நீலம் முன்றில் குறு விழிக்கு நேர் நாடன் கோதை பெரும் கண்ணின் சிறு விழிக்கு நோற்று இருந்த சேய்.

அன்வயம்:—கன்று குதட்டிய கார்நீலம் முன்றில் குறுவிழிக்கு நேர்நாடன் கோதை பெருங் கண்ணின் சிறுவிழிக்கு நோற்றுஇருந்த சேய், மன்றல் அம்தார் மன்னர் நடுஅணைய வந்து இருந்தான்.

பதவுரை.

கன்று - பசுவின் கன்றுகள்
குதட்டிய - மென்று உமிழ்ந்த
கார் - கருமையாகிய
நீலம் - நீலோற்பல மலர்கள்
முன்றில் - (இடையர்களது) முற்றத்தின்
சிறு - சிறிய
விழிக்கு - கண்களுக்கு
நேர் - நேரான
நாடன் - விதர்ப்ப நாட்டையுடைய வீமராஜனது
கோதை - மகளினது
பெரும் - பெரிய
கண்ணின் - கண்களின் [பெறுவதற்கு
சிறு விழிக்கு - கோடியின் பார்வையைப்
நோற்று - தவம்செய்து
இருந்த - இருந்த
சேய் - நளன்,
மன்றல் - வாசனை கமழும்
அம் - அழகிய
தார் - பூமாலையணிந்த
மன்னர் - அரசர்களுக்கு
நடு - நடுவிலே
அணைய - நெருங்கி
வந்து - வந்து
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—தமயந்தியின் கடைக்கண் பார்வை தன்மேல் படுவதற்கு வேண்டிய தவத்தைச்செய்திருந்த நளன் மற்றவர்களுக்கிடையே சுயம்வரமண்டபத்தின்கண் அமர்ந்திருந்தான் என்பது இச்செய்யுளின் பொருள். தமயந்தி என்பதற்குப்பதிலாக அவளை விதர்ப்பதேசமன்னனது மகள் எனக் கவி குறிக்கின்றார். அத்தேசத்தையும் விதர்ப்பநாடு என்று அதன் பேரால் அழைக்காமல் கன்றுகள் மென்றுமிழ்ந்த நீல மலர்கள் இடையர்களது வீட்டின் முற்றத்தின் கண் கண்களுக்கு நேராக இருக்கப்பெற்ற நாடன் எனக் காட்டுகின்றார். நீலமர் எப்பொழுதும் கண்ணிற்கு உவமையாய்க் கூறப்படும் மலர். இவை முற்றங்களிற் கிடப்பதால் அவ்விடத்திற்கும் கண்ணுளதோ என்று எண்ணும்படி இருக்கும்; கன்று குதட்டியதால் மலர்கள் குழைந்திருக்கும் காரணம்பற்றிக் குறுவிழி என்றார்.

நித்திலத்திற் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்த
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தா
ளருங்கேழ் மணிப்பூ ணணங்கு. 118.

பொழிப்புரை:—கடைக்கண்ணால்பார்த்துக்கொண்டு வருவதால் அக் கடைக்கண்ணின் ஒளிபட்டுத் தன் காதணிந்த முத்துத்தோடும் நீலத்தோடுபோல் தோன்றவும், அரசர்களது மனமெல்லாம் இவளைத் தொடர்ந்து வரவும், மாலையின்கண் உள்ள தேனுக்கு மொய்த்திருந்த வண்டுகள் பந்தலிட்டுப் பறக்கவும், ஒளிபொருந்திய இரத்தினாபரணங்கள் அணிந்த தமயந்தி அம் மண்டபத்துள் வந்தாள்.

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல்
கோதை மடமாதைக் கொண்டணைந்த—மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மென்மே னிறைந்து. 119.

கருத்து:—வந்த தமயந்தியை அவள் தோழிமார்கள் சூழ்ந்திருந்ததால் அவளைப் பார்ப்பதற்கு அவாவுற்ற அரசர்கள் அம்மாதரின் ஒடுங்கிய இடுப்புக்களுக்கு இடையே ஏற்பட்ட வழியூடு தம் பார்வையை நெருக்கிச் செலுத்தினார்கள்.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 3. கிளிப்போர்

[408-வது பக்கத் தொடர்ச்சி]

இதற்குள் அரண்மனையிலிருந்து பூசைக்கு உரிய மற்றைப் பொருள்களும் வந்துசேர்ந்தன. சாம்பான் தாயும் புதுமிடாக்களைக் கொண்டுவந்து குளித்து முழுகிப் பொங்கல்வைத்து, ஆடுவெட்டிக் கோழிவெட்டிக் கறிசமைத்தாள்.

வெண்கலப்பேரிகை மாட்டியிருந்த அம்மரத்தைச் சுற்றிப் பல வருடங்களாய்ப் புதர்வளர்ந்து மூடியிருந்தமையால் வழி யடைபட்டிருந்தது. அங்குள்ள செடிகளும் கொடிகளும் மரங்களும் ஒன்றோடொன்று பின்னிவளர்ந்து அச்சத்தை விளைவித்துப் பேய்களுக்கும் சடாமுனிகளுக்கும் உறைவிடமாய் இருந்தன. சாம்பான் மண்வெட்டியும் அரிவாளும்கொண்டு புதர்களைந்து வழியுண்டாக்கினான்.

பின்பு அவன் வாழையிலைவிரித்து மூன்று படைப்புப் படைத்தான்; ஆடுவெட்டிக் கோழிவெட்டிப் பலியிட்டு வட்டோட்டில் இரத்தத்தைப் பிடித்துச் சோறு கலக்கினான். வேளாண்குளத்தினில் நீராடி ஈரத்துணியோடு வந்து, ஒரு கையில் தூபத்தையும் ஒரு கையில் மணியையும் ஏந்தி, மணியடித்துத் தூபங்காட்டினான். 'பேய்களே, பிசாசுகளே, சடாமுனிகளே, நான் உங்களுக்குக் கொடுக்கும் இந்த இரத்தச்சோற்றை நீங்கள் ஏற்றுக்கொண்டு உங்களுக்குப்பலவருடங்களாய்உறைவிடமாயிருந்த இந்தப் புதரிலிருந்து பெயர்ந்துபோங்கள். நான் வெண்கலப் பேரிகையை எடுக்கவேண்டும். எனக்கு எவ்விதமான இடரையும் செய்யாதீர்கள். இதோ, உங்களைப் பணிந்தேன்' என்று சொல்லிச் சொல்லி நாலு திக்கிலும் இரத்தச்சோற்றை வாரிவாரி வீசியெறிந்தான்; வெறிகொண்டு ஒரு கோழியின் தலையைக் கடித்து இரத்தத்தை யுறிஞ்சி ஆவேசத்தால் ஓடினான், ஆடினான். பேய்களும் பிசாசுகளும் 'போகிறோம் போகிறோம்' என்று கதறின வாய்விலகியோடின. மரத்தின்மீது வளர்ந்திருந்த புதர்களைச் சாம்பான் வெட்டிவெட்டி வீழ்த்தியபின் குளக்கரைக்கு ஓடிக் கையலம்பித் திரும்பிவந்து, வெண்கலப் பேரிகையை யெடுத்துக் கீழ்வைத்து வணங்கினான்.

தன் தாயார்தலையில் பொங்கல்மிடாக்களை வைத்து அனுப்பிவிட்டு, சாம்பான் படைப்புத் தின்னத் தொடங்கவே அவ்வளவு ஆட்டிறைச்சியும் கோழியிறைச்சியும் அவன் வயிற்றினுக்குள் மாயமாய் மறைந்தன. அங்கிருந்த சாராயக்குடுவைகள் யாவும் வறிதாயின. பின்பு சாம்பான் குளக்கரையில் கால்நீட்டி யுட்கார்ந்து கஞ்சாக்குடித்தான். வெறிக்கத்தின்று குடித்தமையால் அவனுக்கு நினைவு தடுமாறிற்று. அவன் உட்கார்ந்தபடியே வெண்கலப் பேரிகையை இருகரங்களாலும் பற்றியிழுத்துத் தன்பக்கலில் வைத்துக் கைவிரல்களால் அடித்துப்பார்த்தான். ஓசை செவ்வையாய்க் கேட்கவில்லை. பேரிகையை யடிக்கத்தக்க கோல் தேடவேண்டுமென்று நினைத்தான். நினைத்தவளவில் எழுந்தான். அங்குமிங்குந் தேடினான். வேளாண்குளக்காட்டில் நுழைந்து ஓங்கி வளர்ந்தவொரு மூங்கிற்புதரைக் கண்டு, தடுமாறி நடந்து, அதை யணுகினான். அப்புதருக்கு முன்புறத்தில் ஒரு மலைப்பாம்பு மண்டலமிட்டுப் படுத்திருந்ததைக் கண்டான். 'ஓ! ஓ! நீ இங்கே இருக்கின்றாயா?' என்று சொல்லி யதன் தலையையும் உடம்பையும் சேர்த்துத் தன் காலால் ஆழமிதித்தான். அந்தப் பாம்பு அக்கணமே துவையலாயிற்று. பின்பு அவன் குனிந்து, இடதுகாலைப் பின்புறம் நீட்டி அந்த மூங்கிற்றூறில் பருத்து நீண்டு இருந்த இரு மூங்கில்களைத் தன் கைகளாற் பற்றி யிழுத்தான். அவை வேரோடு சாய்ந்தன. அவற்றைத் தன் தோள்மீது சுமந்து சென்று வேளாண்குளக்கரையை யடைந்து, முழங்காலில் வைத்து அளவு பார்த்துக் கோல்களாக முறித்துப் பேரிகையை எடுத்துக்கொண்டு ஊருக்குள்ளே சென்று, அண்ணன்மாரைக்கண்டு பணிந்து, 'சுவாமி, தங்கள் கட்டளைப்படியே வெண்கலப் பேரிகை யெடுத்து வந்தேன்' என்றான்.

அதுகேட்டுப் பெரியண்ணன், மூன்றாம்நாட் காலையில் வீட்டுக்கொருவர் கட்டிச்சோற்றோடு வேட்டைக்குப் புறப்பட்டு வேளாண்குளக்கரைக்கு வரவேண்டுமென்று வேட்டை சாற்றச்சொன்னார். அங்ஙனமே சாம்பானும் அன்று யானையின்மேல் வெண்கலப்பேரிகையை ஏற்றுவித்து, வீதிசுற்றி வேட்டைசாற்றினான்.

அண்ணன்மார் அவ்வூரிலுள்ள பத்துப்பெயர் கம்மியரை அழைப்பித்து, அரண்மனையின்வாசலில்உலைக்களம் இடுவித்து வேட்டைக்கு வேண்டிய அம்புகளையும் குத்தீட்டிகளையும் இரண்டு நாட்களில் விரைந்து செய்து முடிக்குமாறு உத்தரவிட்டு, கரியையும் உமியையும் இரும்பையும் வண்டிவண்டியாய்க் கொண்டு வந்து கொட்டுவித்தனர்.

கம்மியர் உடனே வேலைதொடங்கி அல்லும் பகலும் உழைத்துக் குத்தீட்டிகளும் அம்புகளும் செய்து முடித்தனர். இதற்குள் அண்ணன்மார் ஏவியவாறே அவ்வூரிலுள்ள வலைஞர்கள் நூறு வலைகள் பின்னிக் கொணர்ந்தனர். வேட்டை வேட்டை யென்று ஊர் முழுதும் வேட்டைப்பேச்சே பேச்சாய் இருந்தது.

வேட்டைசாற்றிய மூன்றாம்நாள் அண்ணன்மார், நீராடி உண்டு உடுத்துக் கால்களுக்குத் தோற்கவசம் தரித்துச் சமுதாடு இடைசெருகிக் கச்சை வரிந்துகட்டித் தலைக்குச் சங்குருமால் அணிந்து பின், சாம்பானை யழைத்து, 'நாங்கள் தங்காளிடம் சென்று வருகின்றோம். நீ நாய்களுக்குச் சதங்கைமாலைபூட்டி அழைத்து முன்சென்று வேளாண்குளத்தருகில் ஆட்களைத் திரட்டு; நாங்கள் அங்கே வந்து சேருகிறோம்' என்று சொல்லித் தங்காள் அரண்மனைக்குப் போயினர்.

அங்கே தங்கை தன் அண்ணன்மாரை வரவேற்றுத் தக்கபடி உபசரித்து, தான் செய்துவைத்திருந்த ஒரு பொற்கூட்டைக் கொண்டுவந்து சின்னண்ணனிடம் கொடுத்து, 'அண்ணா, நான் சொன்ன பொற்கிளிக்கு மூக்குச் சிவப்பு; முதுகு முத்துநிறம்; அடிவயிறு பொன்னிறம். அதைக் கையால் தொட்டாலும் கனம் குறையுமாம். ஆகையால் அதற்குச்சிறிதும்இடர்செய்யாமல் இக்கூட்டினுள்ளே செலுத்திக் கொணர்ந்து கொடு' என்றாள். சின்னண்ணன், 'அம்மா, இது ஒரு பெரிய காரியமா? அம் மரத்திலுள்ள கிளிகள், அவ்வனத்திலுள்ள மிருகங்கள் ஆகிய எல்லாவற்றையும் வேண்டுமாயின் கொணர்ந்துகொடுப்பேனே' என்றான்.

பின்பு, தங்கை பெரியண்ணன் பக்கலில் திரும்பி, 'அண்ணா, இப்பொற்கிளிகள் இருக்கும் இடத்தைப் பற்றி விசாரித்தேன். வீரமலைக்குத் தென்புறத்தில் ஒரு காற்பாதை செல்கின்றதாம். அந்தப் பாதைவழியாய்ச் சிறிதுதூரம் சென்றால் ஒரு புன்னை மரத்தைக் காணலாமாம். அம்மரத்தைக் கடந்து இன்னும் சிறிது தூரம்போனால் அங்கே உப்பிலியன் திட்டு இருக்கின்றதாம். அதற்கப்பால் பெரிய ஆலமரம் ஒன்று நிற்கின்றதாம். இம்மரத்தில் கூடுகட்டி அவ் வாசகிளிகள் தம் பரிவாரத்தோடு வாழ்கின்றனவாம். எங்ஙனமாயினும் அப் பெண்கிளியைக் கொண்டுவந்து எனக்குக் கொடுக்கவேண்டும்' என்றாள்.

பெரியண்ணன், 'அம்மா, செல்வத் தங்கையே, நீ விரும்பியவாறே கிளியைப் பிடித்துக் கொண்டுவந்து தருகிறோம். வேட்டையாட்கள் வேளாண்குளத் தருகில், காத்திருக்கின்றனர். நாங்கள்போய்வருகின்றோம், விடை கொடம்மா" என்று சொல்லித் தம்பியோடு எழுந்து நின்றார்.

தங்கை அண்ணன்மார் அடிதொட்டுக் கும்பிட்டு ஆசி பெற்று, அரண்மனைவாயில்வரையிலும் பின்தொடர்ந்து வந்துநின்று, "அண்ணன்மார்களே வேடுவர் எல்லைக்குட் புகுந்து வேட்டையாடச் செல்கிறீர்கள். வேடுவர் கொடியவர் என்று கேள்விப்படுகின்றேன். அன்றியும் கிளிகளுக்குக் காவலிருப்பது ஒரு வேங்கைப் புலியாம். எச்சரிக்கை! சென்று வாருங்கள்' என்று விடை கொடுத்துத் திரும்பினாள்.

வேளாண் குளக்கரையில் சனக்கூட்டமும் நாய்க்கூட்டமும் கண்ணுக்கு எட்டியவரையிலும் பரவியிருந்தன. பறையும் தம்பட்டமும் முழங்கின. குதிரைகள் நின்று சலித்துப் பொறுமையிழந்து தம் காற்குளம்புகளினால் நிலத்தைக் கீறிப் புழுதியைக் கிளப்பின. வேட்டைக்காரர் கொணர்ந்த வில்லும் அம்பும் வேலும் வாளும் குத்தீட்டியும் தலைமயங்கி யுராய்ந்து ஓல்லென ஒலித்தன.

அண்ணன்மார் வேளாண்குளக்கரையை அடைந்து, ஆட்களையும் நாய்களையும் திரட்டிக் கொம்பினை ஊதி, தாம் முன்னணியில் நின்று கூட்டத்தை நடத்துவித்துக்கொண்டு வீரமலைக்காட்டுக்குப் போய்க் கூட்டத்தைக் கலைத்து நாற்றிசையும் அனுப்பி, மயில் குயில் புறா மான் முதலியவைகளை வேட்டையாடினர்.

பின்பு மேற்சென்று, தங்காள் சொல்லிய வழியே போய், புன்னைமரத்தையும் உப்பிலியன் திட்டையும் கடந்து ஒரு சிற்றாற்றின் கரையை அடைந்தனர். இதற்குள் உச்சிவேளை யானமையின் எல்லோரும் மரநிழலில் தங்கிச் சிறிது இளைப்பாறி, கட்டிச் சாதம் உண்டனர்.

அவ் வாற்றின் மருங்கினில் ஓங்கிவளர்ந்த மூங்கில் மரங்கள் நெருங்கி யிருள்செய்தன. அம் மூங்கில்வனத்துக்கப்பால் கிளிகள் வசிக்கும் ஆலமரம் நின்றது. அம்மரத்தைச் சுற்றி விழுதுகள் தரையைக் கிழித்து உள்ளேசென்று தாய்மரத்துக்குத் தக்க ஊன்றுகோல்களாய்ப் பருத்து வளர்ந்து கண்ணுக் கெட்டியவரையிலும் ஆகாயத்திலே பச்சைப்பந்தர் இட்டதுபோற் பரவி, இலையும் கிளையும் காயும் கனியும் அடர்ந்து பல்லாயிரங் கிளிகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந்தன. அம்மரத்தின் கணுக்கள் பதினாயிரம். ஒவ்வொரு கணுவினின்றும் கிளைகள் பிரிந்து நாற்றிசையிலும் பரவியிருந்தன. தாய்மரத்தின் உயர் கொம்பிலே, தமக்கென்று தனியாயமைந்த கூட்டிலே அரசகிளிகள் வதிந்திருந்தன.

மத்தியான மானமையால் அரசகிளிகள் தம் கூட்டிலே சிறிது கண்ணுறங்கின. உறங்குகையில் பெண்கிளியாகிய பொற்கிளி, தான் தனது காதலனைப் பிரிய நேர்ந்தபடி கனவுகண்டு, துயில் நீங்கி மருண்டெழுந்து புரண்டு, அருகில்தன்மருங்கணைந்து துயிலும் கணவன் மீது தன் மெல்லிய சிறகுகள் படிய முகத்தோடு முகம் வைத்துத் தன் செவ்விய மூக்கினால் கணவனதுகொண்டையை அலைத்தது. ஆண்கிளி கண் விழித்துக் காதலியின் மூக்கோடு தன்மூக் குரைய, 'என் கண்ணே ஏன் என்னை எழுப்பினாய்?' என்றது. பொற்கிளி, 'காதலா, எனக்குச் சிறிது அச்சந்தோன்றுகிறது' என்று மெல்லிய குரலிற் பேசி, தனது முகத்தைக் கணவனது இறக்கைக்குள்ளே ஒளித்தது. ஆண்கிளி தன் மூக்கினால் பொற்கிளியின் மூக்கைப் பற்றி உயர்த்தி, 'என் அன்பே, உன் அச்சத்துக்குக் காரணம் யாது? நானிருக்கையில் நீ பயப்படலாமா?' என்று கண்ணோடுகண் வைத்துக் காதலியை மெல்ல வினவிற்று. பொற்கிளி சிறிது வெட்கி, 'இல்லை. உன்னைவிட்டு நான் பிரிந்ததாக இப்பொழுதோர் கனவுகண்டேன். அதுமுதல் அக்கனவை நினைக்கவும் என்மனம் திடுக்கிடுகிறது' என்றது. ஆண்கிளி இதைக்கேட்டு மூன்றுமுழ உயரங் குதித்து, சிறகுகளை விரித்தபடியே காதலிக்கு முன்புறத்தில் உட்கார்ந்து, காதலியைத் தன் சிறகுகளால் மூடி, 'கண்ணே, வீரதங்காள் உள்ளமட்டும் நமக்குப் பயமேது? சீ! என்ன பேதைமை! உன் திகிலையொழி" என்று தேறுதல் சொல்லி, தலைகவிழ்த்திருந்த தன் காதலியின் நுனிமூக்கைத் தன் மூக்கின் நுனியாற் பற்றி அப்புறமும் இப்புறமும் அசைத்தது. பொற்கிளி சிறிதுநேரம் ஒன்றும் பேசாமலிருந்து காதலன் கழுத்தின்மீது குறுக்காகத் தன் மூக்கை வைத்து, 'அன்பா, நாம் இவ்விடத்தினின்றும் நீங்கிப்போவோம் வா' என்றது. ஆண்கிளி நகைத்து "என் கிளியே உனக்குப் பைத்தியம் பிடித்ததுபோலும்? நமக்குத் தீங்கு செய்வார் யாவர்? நாம் யாருக்கு, என்ன தீங்கு செய்தோம்? ஒரு வேளை நமக்கு மனிதரால் தீங்கு நேரிடும் என்று நினைப்பாயாயின் நமக்குக் காவலிருப்பது வீரதங்காள் நியமித்த வேங்கைப்புலி என்பதை மறவாதே. நமக்கு எக்காலத்தும் ஆபத்து வாராது; நாம் இவ்விடத்தை விட்டுப் போவோமாயின் ஒருகால் ஆபத்து நேரினும் நேரும்; என் அன்பே, இக்கிளையை விடுத்து அடுத்தகிளைக்குப் போவோம்வா. நீ அங்கே சுகமாய்த் தூங்கலாம். நான் காவலிருக்கிறேன்" என்றுசொல்லித் தன் காதலியை அழைத்துக்கொண்டு மறுகிளைக்குச் சென்று, அங்கே அதைத் துயிலப்பண்ணித் தான் காவலிருக்கையில் மெய்ம்மறந்து தானும்துயின்றது. மற்றைக்கிளிகளும் சிறிது கண்ணயர்ந்தன.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[414-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம்பத்து. 1-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

முடிச்சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ
வடிச்சோதி நீநின்ற தாமரையாய் மலர்ந்ததுவோ
[பொன்
படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே.

குறிப்புக்கள்:—படிச்சோதி, படி-சுபாவம்—சுபாவமாயுள்ள ஜோதிஸ். கட்டுரை - நிரூபித்துச்சொல்லல்-காரண காரியங்களைக்கண்டு ஆலோசித்துத் தீர்மானஞ் செய்தல். இங்குத் திருமலையிலிருக்கும் அழகரைக் கண்டு ஆழ்வார் வினவுகிறார். ஓ திருமாலே! உன் திருமுக தேஜஸு கிரீடதேஜஸாய் மலர்ந்ததுவோ? அல்லது கிரீடதேஜஸானது திருமுகத்தின் தேஜஸாய் ஒத்துப் போய்விட்டதோ? நின்றருளும் தாமரைதான் திருவடிகளின் சோபையாய்விட்டதோ; அல்லது உன் திருவடிகளின் தேஜஸு கீழே தாமரைப் பூவாய் விகஸித்து விட்டதோ? உன்னுடைய பீதாம்பரம்உன்னுடைய கடி தேஜஸுடன் கலந்துவிட்டதோ? பைம்பொன் ஆபரணங்கள் உன் அவயவ சோபையுடன்சேர்ந்து விட்டனவோ? இவ்வண்ணம் கலந்து விளங்கும் சோபையைச் சந்தேகமறப் பகுத்தறிய நான் வல்லவனல்லேன். நீ ஸர்வஞ்ஞன் ஆனாலும் உனக்குங்கூட விவேகித்தே சொல்லவேண்டி வரும்—பகுத்தறிந்து கட்டுரைப்பாயே.

2-ம் பாசுரம்.

கட்டுரைக்கிற் றாமரைநின் கண்பாதம் கையொவ்வா
சுட்டுரைத்த நன்பொன்னுன் திருமேனி யொளி
[யொவ்வா
தொட்டுரைத்திவ் வுலகுன்னைப் புகழ்வெல்லாம்
[பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமாற் பரஞ்சோதி.

பதக்குறிப்புக்கள்:-பட்டுரையாய்-நெஞ்சில் தோன்றியதை அர்த்த விவேகமில்லாமல் சொல்லுஞ் சொற்களாகி, புற்கென்றே - அல்பமாய், அதாவது-உவமானமாகச் சொல்லப்படும் வஸ்து உவமிக்கும் வஸ்துவை ஏற்றப்படுத்தாமல் தாழ்ச்சியாகவே காட்டும்.

பொழிப்புரை :—"மெய்யாகச் சொல்லுமிடத்து, தாமரைப் புஷ்பம் கண் பாதம் கைகளுக்கு ஒப்பாகாது. சுட்டு உரைத்த நன்பொன்னும் திருமேனிக்கு ஒப்பாகாது. இப்படியிருக்க இவைகளைத் திருஷ்டாந்தமாகச் சொல்லி இந்த உலகத்தார் உன்னைப் புகழாநிற்பர். திருஷ்டாந்தமாகச் சொல்லுகிறவை எல்லாம் ஒப்பாக மாட்டாமையன்றி உனக்குக் குறைவையே உண்டாக்கும்" என்றுசொல்லி,திவ்விய அவயவசோபையை ஏத்துகிறார்—ஆறுயிரப்படி.

3-ம் பாசுரம்.

பரஞ்சோதி நீபரமாய் நின்னிகழ்ந்து பின்மற்றோர்
பரஞ்சோதி யின்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்தவெம்
பரஞ்சோதி கோவிந்தா பண்புரைக்க மாட்டேனே.

குறிப்புக்கள்:—பரஞ்சோதி-உத்கிருஷ்டமான அழகுடையவனே; நீ பரமாய் - நீயே உத்கிருஷ்ட வஸ்துவாய், நின் இகழ்ந்தபின் - உன்னை தவிர்த்து வேறு உபமானத்தைத்தேட எத்தனித்த பின்னர்; படியோவி-உபமானமில்லாமல் நிகழ்கின்ற ஜோதியையுடையவனே! நின்னுள்ளே - உன் ஸங்கல்பத்தால் படைத்த, படருலகம் - விஸ்தாரமான ஜக்தசிருஷ்டி—எம்பரஞ்சோதி-உன்னுடைய திவ்விய தேஜஸை எனக்கேகாட்டிக்கொடுத்த அழகர் பெருமானே. பண்பு-பிரகாரங்களைச் சொல்லச் சக்தனல்லேன். "ஓ பரஞ்சோதியே நீ இப்படி யழகினால் எல்லாரிலும் மேற்பட்டு வர்த்தியாநின்றபிறகு மற்றுன்னைப்போல அழகியவர் இல்லாமையாலே உபமானம்கூற வஸ்து வெறொன்றில்லை. பரஞ்சோதி சப்தத்திற்கு நீயே பொருளாகையாலும், ஸர்வ ஜகத்துக் காரணத்துவப் பிரயுக்த நிர்வதிக தேஜஸையுடையவனாய் நிர்வதிக ஸௌசீல்ய விசிஷ்டனாயிருந்த உன்னுடையவிந்த மஹாகுணங்களெனக்குச் சொல்ல நிலமல்ல வென்கிறார்"—ஆறுயிரப்படி.

குறிப்பு:—சென்ற பாசுரத்தில், முன்னர் ஸர்வஞ்ஞனை பகவானாலும் இது அது வென்று தெரிந்து சொல்ல வொண்ணாதென்றார். இப்பாசுரத்தில் தாமே விவேகித்து உண்மையில் திருஷ்டாந்தங்கள் ஆகாதனவற்றை அவன்தான் எப்படி உபமேயத்துக்கு ஒப்பென்று ஏற்றுக்கொள்ளக்கூடும் என்கிறார்.

4-ம் பாசுரம்.

மாட்டாதே யாகிலுமிம் மலர்தலைமா ஞாலம்நின்
மாட்டாய மலர்புரையுந் திருவுருவம் மனம்வைக்க
மாட்டாத பலசமய மதிகொடுத்தாய் மலர்த்துழாய்
மாட்டேநீ மனம்வைத்தாய் மாஞாலம் வருந்தாதே.

பதவுரை.

இம் மலர்தலை மா ஞாலம்-மலர்போன்ற உன் திருஉந்தியை மூலஸ்தாநமாக உடைத்தான இந்தப் பெரிய உலகம் அதாவது உலகத்தார், நின்மாட்டு - உன்னிடத்தில், ஆய-ஏற்கனவே உனக்கு அஸாதாரணமாய் ஏற்பட்டிருக்கிற, மலர் புரையும் - அன்று மலர்ந்த புஷ்பம்போல, திருவுருவம் - திவ்விய மங்களவிக்கிரஹத்தை, மனம்வைக்க - மனதில் தரிக்க, மாட்டாதேயாகிலும்-அநாதியாகச் சக்தியற்றவர்களாயிருந்தபோதிலும், மாட்டாய பல சமய மதி - திவ்விய மங்கள விக்கிரஹரூபம்உனக்கில்லையென்று கொள்கையாகக் கொண்ட அநேக வேறு சமய மதங்களை, கொடுத்தாய் - பலருக்குத் தந்தாய். முன்பேயே அவிவேகத்தால் மோஹித்துகிடக்கும் அசக்தமான ஜனங்களைக் கெடுத்தாயென்பது ஸூசகம்—நீ-ரக்ஷிக்க வல்லனை நீ ஒருவனே, மலர்த்துழாய் மாட்டே - துளபத்தினிடத்தில் அதாவது உனக்குப் பிரியமான சிற்சில ஆன்மாக்களாகிய இதர வஸ்துக்களிடத்திலே, மனம்வைத்தாய் - உகப்புகொண்டாய், மாஞாலம்-பெரிய ஜனக்கூட்டங்கள், வருந்தாதே - வருந்தாதோ - வருந்தும் (வினைமுற்று.) புருஷார்த்தமின்றிக் கெட்டுவிடும். இப்பாசுரத்தில் ஆழ்வார் தமக்குத் தற்காலம் பெரும்பேறுயுள்ள பகவானது அழகின் ஈடுபாடு உலகத்தார் இழ

ந்துபடுகிறார்களே யென்ற ஜீவகாருணியத்தால் தூண்டப்பட்டுத் திருவுள்ளங்கலங்கி, 'ஐயோ! இவர்களையும் ரக்ஷிக்க உரிமைபட்டவனாயிருந்தும் ஈசன் தன் திவ்வியமங்கள சுவரூபத்தைக் காண்பிக்காதே தாங்கள் ஏற்படுத்திக்கொண்ட பலபல மதத்தில் சுழன்றுகெடும்படி இவர்களைத் துயர்பாட்டுக்குள் அமர்த்திவிட்டானே" என்று தத்துவஉணர்ச்சி இல்லாதவர்போல் நோவுபட்டுப் பகவானிடத்தில் குற்றம் சாட்டுகிறார். இவரே அவ்வண்ணம் பற்பல குதிர்ஷ்டி மதங்களின் சுழலில் அகப்படுவது ஜன்மாந்திர பாபத்தாலென்றும், "புத்தி கர்மானு ஸாரிணி" ஆகையால், அவர்கள் அவ்வாறு வருந்துவது நீதிதானென்றும் அங்ஙனமன்றித் தத்தம் கர்மபலன்களை அநுபவியாமல் அவர்களை விடுவிப்பது ஆஞ்ஞைக்கும் நியதிக்கும் ஏற்காதென்றும் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு இன்றி, குதிர்ஷ்டி மதங்கள் ஜனங்களைக் கலக்காவிட்டால் எல்லாரும் வீடுபெறப் பிரசங்கிக்குமென்றும் இது உலகநீதியாகாதென்றும் இவரே அருளிச்செய்திருக்கின்றார் ஆனபோதிலும் ஆழ்வாரின் இந்த மனச்சஞ்சலம் உலகத்தாரிடத்தில் அவர்க்குள்ள தாய்போன்றவாத்ஸல்லியமும்ஆதரவும்பற்றி வந்ததாகையால் ஈசன் அவற்றை க்ஷமித்தருளுகிறானென்று கொள்ளவேண்டும்.எம்பெருமான் உடனே அவருடைய நோக்கத்தை மாற்றுதவனாயிருக்க அடுத்தபாசுரத்திலும், அவன் குணங்களைத்தான் எவ்வண்ணம் முடியச் சொல்வதென்று ஆழ்வார் அறுதியிடுகிறார். ஆழ்வாரின் மனநிகழ்ச்சி இவ்வாறுநடைபெற்றுச்சிறிதுகாலம் கழிந்தபின்னரே9ம்பாசுரத்தில், 'நாம் ஜகத்தைவெருட்டித் தெருள்கொள்ளச் சமயம் வாய்த்தபோழ்துஎல்லாம்நம்முடையஆச்ரிதவாத்ஸல்யத்தைஉலகறியவிளம்பரப்படுத்திப்பிராணிகள்நம்மை அடுத்துய்ய முயற்சிசெய்கின்றோம். நீர் அறியமாட்டீரோ. கஜேந்திர மோக்ஷத்திற்கு மூன்றுலகும் அறியக் கருடாரூடராய்ச் சக்கராயுதம் கூராய்த் தீப்தமாய் ஜ்வலிக்கக் கருடனது சிறகின்ஒளி மூன்றுலோகமும்வியாபித்து விளங்கும்படி இடர் தீர்க்கப் போகவில்லையோ", என்று ஆழ்வாரைத் தேற்றினார். பிரியமுள்ள வோர் மனைவியும் வாலப்பியமுள்ள அருமைப் பிள்ளையும் போன்று ஆழ்வார் ஈசனிடத்தில் குற்றம்சாட்டவும் குறை கூறவும் ஏலும். ஆழ்வார் இவ்வண்ணம் மிகைபடச்சொல்வதைப் பொருளாக்கி உரையிடுவதுகூட நம்போலிகளுக்குப்பெரும் பாவமென்று நம் அருமையான ஆறுயிரப்படி உரைகாரர் இந்தப் பாசுரத்துக்கு உரையெழுதக்கூசிவெகுசுருக்கமாய் "இப்படிப்போகியபூதனாயிருந்த எம்பெருமானை, இந்த லோகம் இழந்துபோகுகிறபடிகாண் என்றுகொண்டு இன்னாதாகிறார்" என்று முடித்திருக்கின்றார். இம் மஹா புருஷன் போன்றவோர் சிறந்த உரைகாரரைத் திருவாய்மொழியன்றி வேறு எந்தக் கிரந்தம் பெற்றுள்ளது? வைணவர்க்கன்றி மற்றெவர்க்கு இவ்வாறு ஆசான்மார் வாய்த்திருக்கின்றார்கள்? இவ்வருமை உரையின் ஆர்ஜவத்தையும் பெருமைப்பாட்டையும் நன்குணராது எத்தனை வைணவர்கள் இவ்வுரையின் உதவியை இழந்துபடுகிறார்கள்! என்ன கொடுமையோ, ஏ பாவம்!

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

18970

[411-வது பக்கத் தொடர்ச்சி]

3. சித்தாந்தங்கள்.

கடவுள்.

ஆரம்பவாதம் பொருத்தமற்ற கொள்கையாகும். பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும், எல்லாம் ஓர் குறிப்பிட்ட சமயத்தில், திடீரெனப் படைக்கப்பட்டனவல்ல. வஸ்துவையும் சாயையும் பிரித்து, முதலில் வஸ்து இருந்ததாகவும் பின்னர்ச் சாயை தோன்றியதாகவும் கொள்ளுதல் பிழையாகும்.வஸ்துவுள் சாயையிருக்கின்றது போலும்; சாயை மூலமாகத்தான் வஸ்துவை நாம் அறிகின்றோம். சிற்றலகில், எண்ணத்தையுஞ் செயலையும் காரியத்தையும் கர்த்தாவையும் நாம் பிரித்துப்பார்த் தறிவதுபோல், ஆதிகாரணனையும் பிரபஞ்சத்தையும் பிரித்து, முன் பின் என வகுத்து அறியப் புகுந்தால் என்னாகும்! பிரபஞ்சத்திற்கப்பால் ஓர் இடம் ஏது? வேறிடம் இல்லையானால், கடவுள் எங்கு இருக்கக்கூடும்? உண்மை யாதெனில், கடவுளே பிரபஞ்சாதிகளுக்குள்ளெல்லாம் ஊடுருவிப்பாய்ந்து நிற்கின்றார் என்பதே. பிரபஞ்சத்திற் கப்பால் காரணனாக நின்று பிரபஞ்சாதிகளை உண்டுபண்ணிப் பின் அவைகளிற் புகுந்து இயக்கிவருவதில்லை. கடவுளே பிரபஞ்சம், பிரபஞ்சமே கடவுள். வஸ்துவையும் சாயையும் பிரித்தற் காகாததுபோல், பிரபஞ்ச பிரபஞ்சாதிகளையும் கடவுளையும் பிரிக்கமுடியாது. தோன்றியிருப்பனவெல்லாம் கடவுளுள் தோய்ந்து இருப்பன. கடவுளில்லாமல் யாதொன்றும் தோன்றியிராது, அல்லது எதையும் உணர்ந்தறிதற் காகாது.

மூலவஸ்து ஒன்றே; மூலவஸ்துவின் குணம் இயங்கித் தோன்றிப் பரிணமித்தலாகும்; அக் குணத்தின் வடிவமே பிரபஞ்சம். ஆதலால், பிரபஞ்சாதிகளைப்பற்றிய அறிவே கடவுளைப்பற்றிய அறிவாகும். உண்மையில், பிரபஞ்சவாயிலாகத்தான் கடவுளை அறிதற்கு இயல்கின்றது.

முதலில் விசாரித்துப்பார்த்துப் பின் ஆராய்ச்சி செய்து, பின் நிர்ணயித்து நாம் கருமமியற்றிவருதல் போல், இப் பிரபஞ்சாதிகளைக் கடவுள் உண்டுபண்ணவில்லை. கடவுளின் சம்பூர்ண ஞானம் இயங்கி உலகாதிகளைத் தோற்றுவிக்கும்பண்புடைத்து; இஞ்ஞானமே ஞேயமாகின்றது. ஞாதுரு ஞானம் ஞேயம் எனக்கூறுபடுத்தல் இழுக்காகும். கடவுள் சுதந்திரி. சுதந்திரம் என்பது தன் இயற்கையாம் சுயசக்தியை யநுசரித்து நடத்தலாகும். இச் சுதந்திரத்தின் இவ் வியற்கையின் இச்சுயசக்தியின் வடிவமே பிரபஞ்சமாகும். இயற்கை முறைமை, அல்லது விதிகள் (Laws of Nature) எனப்படுவன வெல்லாம் சர்வஞானமும் கிரியாசக்தியும் ததும்பப்பெற்ற மூலவஸ்துவின் வழி, அல்லது ஆக்ஞை (Decrees of God)களாம். இச்சையினால் உந்தப்பட்டு, ஜீவராசிகளின் சுகத்தையே முன்னிட்டுப் பிரபஞ்சம் தோன்றிச் சுழல்வதன்று. மூலவஸ்து பூரணமானது; பூரணத்தின் குணதிசயம் ததும்பித் தோன்றி வியாபிப்பது; இவ்வாறு ததும்பிவியாபித்துத் தோன்றியுளது பிரபஞ்சம்.

இதுகாறும் கடவுளின் இருப்பையும் குணாதிசயங்களையும் குறிப்பிட்டு வந்தோம். எனினும், அவை

களை முற்றுண்மையெனக் கொள்ளக்கூடாது. அகண்டகுணமும் அநாதசக்தியும் நிரம்பிய நிரந்தரவஸ்துவாம் அவ்வொரு மூலப்பொருளைப் பற்றி, இன்றிருந்து நாளை யழியும் புல்லான்மாக்களாகிய நாமோ அறிவோம்? கண்டிதப் பொருள்கள் இனத்தைச் சேர்ந்த நாம் அகண்டாகார சச்சிதானந்த வஸ்துவைப்பற்றி எவ்வாறு தெளியக்கூடும்? எனினும், மூலவஸ்து ஏகம், அல்லது ஒன்றே, என்று கூறி வருகின்றோம்; இதன் பொருள் யாதெனில், நாம் அநுபவ உலகில் பார்த்துவரும் பல பொருள்களி லொன்றன்று அது என்பதே.என்றும் அழியாதது என்கின்றோம்; இதன் கருத்து யாதெனில், வியவகாரிக திருஷ்டிக்குத் தோன்றும் மாற்றமும் மறைவும் தேய்வு அழிவுகளும், அதற்கு இல்லை என்பதேயாம். இவ்வாறு தோற்றவுலகின் போக்கு நிகழ்ச்சி அநுபவங்களினின்று மூலவஸ்துவைப்பற்றி நாம் அநுமானிக்க முடியுமே யல்லாமல், பூரணமாகவும் உறுதியாகவும் அறியமுடியாது என்ற விஷயத்தினின்று மனச் சோர்வுற்று, அறிந்தது எவ்வளவு சிறியதாயினும் அதைப் பயனற்றதென்று நாம் நிராகரித்துக் கைவிடக் கூடாது.

பிரபஞ்சத்தின் தன்மை என்னை? "எல்லாம் ஜடம் (Matter)" என்பர் ஒரு சாரார். "அற்றன்று; உயிரற்றுச் சுயமாக இயங்கக் கூடாத ஸ்தூலம், அல்லது ஜடமன்று இவ்வுலகம்; ஆனால், ஜடமும் இயக்கமும் (Motion) கூடப்பெற்ற தாகும். இவ் வியக்கசக்தி மனத்தின் குணமுஞ் செயலு மாவது. மனமே உண்மைப் பொருள்; மனதினாற்றான் பூதவுலகையும் சுயத்தையும் அறியக்கூடும்," என்பர் மற்றொரு சாரார். உயிரற்று அசைவற்ற வெறும் ஜடப் (dead, inert matter) என ஒரு தனிப் பொருளில்லை. இயக்கம் இயக்கக்காரணம் இயக்கப்படும்பொருள், இம்மூன்றும் ஒன்றே எனக் கொண்டவர் ஸ்பைனோஸா. மனத்தின் இழிய தோற்றமே ஜடம் எனக் கொள்ளலாம்; ஆனால், ஜடத்தின் உயர்ந்த தாரிய நிலையே மனம் எனக் கொள்ளக்கூடாது.

பிரபஞ்சமும் பிரபஞ்சாதிகளும்:—மூலவஸ்துவின் (Substance) சாரம் (தத்வம்-Essence) எது அல்லது எத்தன்மைத்து எனப் புத்தி (Intellect) அறிகின்றதோ அதுவே குணம் (Attribute) என்பது. மூலவஸ்துவின் தோற்றங்களே, அல்லது எம்மூலமாகத் தன்னை மூலவஸ்துவானது அறிவிக்கின்றதோ, அதுவே வழி (Mode) என்பது. அதாவது, சிந்திப்பும் (Thought) விரிவும் (Extension,) அல்லது குணமும் தோற்றமும் இணங்கப்பெற்று விளங்குவது பிரபஞ்சம். இவைகளை ஞானமும் ஞேயமுமெனக்கொள்ளலாம். இவ்விரண்டில் ஒன்று மற்றதாக மாறுவதில்லை; அதாவது, ஞேயம் ஞேயமாகவும், ஞானம் ஞானமாகவுமே நிலைத்து நிற்பன. இவ்விரண்டையும் இணைத்து நிற்பது மூலவஸ்து. பற்பல பெயர்கள் கொண்டவர்களாய் மாந்தர்கள் இருப்பினும், பொதுக்குணத்தை யொட்டியவரையிலும் அனைவரும் மானுடராசியைச் சேர்ந்தவராவர். தனிக்குணத்தை யொட்டியவரையிலும் ராமன் கிருஷ்ணனாகவும், கிருஷ்ணன் ராமனாகவும் மாறுவிடினும், அவ்விருவருவங்களை இயைப்பிக்கும், அத் தோற்றங்களை வெளிப்படுத்தி நடத்தும் மூலக்குணம் ஒன்றேயல்லவோ? இன்னமும், ஒரே பொருளைக் குறித்தற்குப் பற்பல பாஷைகளில் வெவ்வேறு வார்த்தைகள் இருந்துவருகின்றன. ஆயினும் அவ்வெவ்வேறு வார்த்தைகளின் ஆதியும் அந்தமும், அதாவது அவ்வார்த்தைகள் குறிப்பிடும் பொருள் ஒன்றேயல்லவோ? இது போலவே, பற்பல குணங்களும் பல்வேறு தோற்றங்களும் ஒரே மூலவஸ்துவைத்தான் குறிப்பிக்கின்றன. நாம் பார்த்து உணர்ந்து அறிந்துவரும் மேற்சொல்லிய சிந்தனையும் உருவமுமான இரு குணங்களை மாத்திரந்தானோ பரம்பொருள் பெற்றுளதெனச் சிலர் வினவலாம். கணித்தற்கியலாத வேறு பெருங் குணங்களும் தோற்றங்களும் இருக்கலாம்; ஆனால், அவைகளை நம்முடைய சிற்றறிவைக்கொண்டு அறிய முடியாது. நாம் அறிவனவும் அறியக் கூடியனவும் மேற்காட்டியவைகளே யாம். அளப்பரிய அகோசர அநிர்வசனீயப் பரம்பொருளைப்பற்றியும், எல்லையற்ற பிரபஞ்சத்தைப்பற்றியும் முற்றிலும் நாம் அறிய முடியாது. இவ்விஷயத்தை அறிந்து ஒப்பிப் பணிந்து நடத்தலே அறிஞனின் குணமாகும்.

"விரிவு, அல்லது பரப்பும், அகண்டிதமும் கடவுளின் குணமாயின், விரிதற்கு, அல்லது பரவுதற்கு இடம் வேண்டுமல்லவோ? மேலும், இடம் என்பது பலபல பாகங்களாக வகுக்கப்படக் கூடியது, அதாவது ஒவ்வொரு பாகமும் கண்டிக்கப்பட்டு நிற்பது. இவ்வாறாயின், அகண்டம் என்பதின் பொருளென்னை? திக் அல்லது வெளி (Space) என்பது என்னை? இது நிரந்தர அகண்ட மூலவஸ்துவுக் குட்படாத தனிப் பொருளோ? தனக்குப் புறம்பான அவ்வெளியில் உருவங்களை மூலப்பொருள் கொணர்ந்து பரப்புகின்றதோ? உண்மை என்னை?" என்ற கேள்விகள் எழலாம். யதார்த்தத்தில், திக் என்பது கடவுளுக்குப் புறம்பான தனிப்பொரு ளன்று. கடவுளே பிரபஞ்சமாக விரிந்து வியாபித்து நிற்கின்றதென்றால், திக் என்பதும் அக்கடவுளுக் குட்பட்டுவிட வில்லையோ? பிரபஞ்சத்திற் கப்பால் கடவுள் இருந்ததாகக் கொள்வோமாயின், பின், வெட்டவெளியில் அக்கடவுள் புகுந்ததாகவும், அல்லது அவ்வெளியில் தோற்றவுலகையும் பொருள்களையும் படைத்ததாகவும் எண்ணுதற்கு இடமுண்டு. இவ்வாறாயின், வெளியை நிரப்பி நிற்கும் பொருள்களில் ஒன்றாக அக்கடவுளும் ஆகிவிடுகின்றது! ஆனால், கடவுளே பிரபஞ்சமாகப் பரிணமித்துளதெனின், காலம் இடம் ஆகியவைகளெல்லாம் அக்கடவுள் அல்லது பிரபஞ்சத்துள் முழுதும் அடங்கிவிட வில்லையோ? சுருக்கத்தில், தோற்ற வுலகமாகக் கடவுள் இழியவில்லை; ஆனால், முறைமையும் வீரியமும் எழிலும் ஞானமும் மாண்பும் கருணையும் நிரம்பப்பெற்ற கடவுளாகத் தோற்றவுலகம் உயர்த்தப் பட்டிருப்பது போலும்.

ஒப்புவமையற்று ஏகமாய் விளங்கும் மூலவஸ்து, அல்லது கடவுள், அல்லது பிரபஞ்சத்திற்குள் (Substance-God-Nature) பலதிறத் தோற்றமுடைய பொருள்கள் அடங்கி நிற்பன. சிருஷ்டிகர்த்தா, அல்லது தோற்றுவிக்கும் வஸ்து (Natura Naturans-Nature as Creative) தோன்றி இயங்கும் பிரபஞ்சாதிகள் (Natura Naturata, Nature as Created) என இருபான்மையதாக விளங்குவது அம்மூலவஸ்து. அதாவது, ஒருபக்கத்தில் காரணகர்த்தாவாகவும், மற்றொரு பக்கத்தில்தானே காரியமாகவும்தோன்றுவது கடவுள். நம்முடைய கூர்த்த அறிவால் முழுமுதல்வஸ்துவை எளிதில் அறிதற்கு இயலாது. காலம் இடம், காரணம் காரியம், காரியம் பலன், நன்மை

தீமை எனக் கற்பித்தும் வகுத்தும் ஒவ்வொன்றின் பொதுக் குணத்தையும், பேதத்திற்குக் காரணமான சிறப்பியல்பையும், ஒன்றிணக்கத்தையும் படிப்படியாக ஆராய்ந்து பார்த்தும் வரவே, அறிவு பெருகி, அநுபவம் முதிர்கின்றது. இறுதியில், ஏகாந்த அபேத நிர்விகார வஸ்துவைப்பற்றி ஒருவாறு தெளிவுறுகின்றோம்.

தோற்றவுலகம் மித்தையல்ல. மேலும், புலனுணர்வுகளால் உணரப்படுவது மாத்திரம் பிரபஞ்சத்தின் மெய்க்குணமன்று. பன்மைத்தன்மையையும், மாற்றங்களையும், குற்றங் குறைகளையும் புலப்படுத்துவன பொறிகள். மேற்காட்டியபடி, விசால நோக்கத்தால், பலதிற அநுபவத்தால், சுய ஞானத்தினாற்றான் (Intuition) தோற்ற விபரீதங்களையும், விபரீதத் தோற்றங்களையும் விடுத்து உண்மை அறிய முடியும்.

ஓட்டம் ஒடுக்கம், அல்லது இயக்கம் நிம்மதி (Motion and Rest) என்பனவால் உலகாதிகள் ஒன்றையொன்று தாக்கிப் பெருக்கிச் சிறுக்கி, உயர்த்தித் தாழ்த்தி மாற்றப்பட்டுவருவனவாகும்." எல்லாம் ஒன்றே எனின், இச்சலனம் அல்லது மாற்றங்களின் பொருளென்னை? யாவும் சலித்து மாறிக்கொண்டேயிருப்பன என்றால், ஒற்றுமை அறிவு எவ்வாறு உண்டாகின்றதோ?" என்ற கேள்விகள் பிறக்கலாம். சலனமும் மாற்றமும் ஓட்டமும் ஒடுக்கமும், பொய்யல்ல; ஆனால் இவைகளெல்லாம் பிரபஞ்சாதிகளுள் நிகழ்வன. அதாவது பிரபஞ்சாதிகள் மாறி வருகின்றனவேயல்லாது, பிரபஞ்சம் மாறுவதில்லை, எப்பொழுதும் ஸ்திரமாய் நிற்கின்றதுபோலும்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[395-வது பக்கத் தொடர்ச்சி]

VI. அநுபலத்தி.

(i) அநுபலத்தி யாது?

அநுபலத்தி என்பது அபாவம். அபாவப்பிரமையின் அசாதாரணகாரணம் அநுபலத்திப் பிரமாணம் எனப்படும். இப்பிரமாணம் வியாபாரமின்றியது; பிரமாணமென்பது உபசார வழக்கு.

அபாவத்தை விளக்குகின்ற இந்திரியம் விசேடண விசேடிய முகத்தால் இந்திரிய சம்பந்தமில்லாத அபாவம் கிரகித்தலில் மிகைபடக் கூறலென்னும் குற்றம் விசேடணத்துவத்தானே விலக்கப்படும். அபாவத்தை இந்திரியம் விளக்குமிடத்து அதனைப் பாவவடிவமாகவே விளக்குகின்றது:—

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
இராவணனை யிருபதுதோள் நெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் றன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி னானை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே.
திருநள்ளாறு - திருத்தாண்டகம் 10.

அபாவத்தை இந்திரியசம்பந்த உணர்ச்சியென்று கொள்ளலாகாது. சம்பந்தத்திற்கு இரண்டு பதார்த்தம் அவசியம். இரண்டு பதார்த்தமில்லாதபோது, சம்பந்தமென்னும் பதப்பிரயோகத்திற்கு இடமில்லை.

அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள்
அருவினைகள் நல்குரவு செல்லா வண்ணம்
கடிந்தானைக் கார்முகில்போற் கண்டத் தானைக்
கடுஞ்சினத்தோன் தன்னுடலை நேமி யாலே
தடிந்தானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தத்துவனை யுத்தமனை நினைவார் நெஞ்சில்
படிந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே.
திருப்பள்ளியின் முக்கூடல்-திருத்தாண்டகம் 5.

(ii) அநுபலத்தி யொரு பிரமாணமா?

சிலர் அநுபலத்தியை ஒரு பிரமாணமெனக் கொள்வார். வாயுவி லுருவமின்மை மூடிய கண்ணையுடையவனுக்கும் ஞான முண்டாவதினால், அநுபலத்தி ஒரு தனிப்பிரமாணமா மென்பர்.

ஊரி லாயென் றொன்றாக வுரைப்பதோர்
பேரி லாய்பிறை சூடிய பிஞ்ஞகா
காரு லாங்கண்ட னேயுன் கழலடி
சேர்வி லார்கட்குத் தீயவை தீயவே.
சித்தத்தொகை - திருக்குறுந்தொகை. 7.

ஆயினும், பிரத்தியட்சப் பிரமாணத்தினால் கடம் போன்ற ஒருபொருள் அபாவம் கிரகிக்கப்படுமிடத்து, அதற்கு அதன் அநுபலத்தி சககாரிய காரணமாயிருத்தலின், அது சுதந்தரப் பிரமாணமாகமாட்டாது. "ஊரிலாய்," "பேரிலாய்" என்பது சிவபெருமானை அநுபலத்தி முறையில் காட்டினும் "காருலாங் கண்டனே" என்ற பிரத்தியட்சிய உடன்பாட்டு இலக்கணையால் காட்டாவிடின் யாதொன்றும் அறிவில் எழுந்து விளங்கமாட்டாது. இந்திரியங்கள் தம்மோடு சம்பந்தப் பொருளையே கிரகிப்பனவாம்.

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வானமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே
திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 7.

ஞானகாரணத்தன்மையால் இந்திரியங்கள் வஸ்துவை யடைந்தவுடன், அவற்றை இன்னதென விளக்கும். இந்திரியங்களுக்கும் பொருள்களின் அபாவத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சம்பந்தமென்பது இருவகை; சையோகசம்பந்தம் சமவாயசம்பந்தம் என்பன. சையோக சம்பந்தமாவது தம்முள் விட்டுநீங்கி வெவ்வேறாயிருக்கக் கூடிய பதார்த்தங்களின் * சம்பந்தத்தைச் சையோகமெனக்கூறுவர். தம்முள் விட்டுநீங்

* இதற்குதாரணம், சிவபெருமானுடன் சம்பந்தப்படும் வெள்ளிக்குன்ற விடை நாகம் சடை கங்கை முதலியன. தேவாரத்தில் மேல்வரும் பாசுரம் காண்க:—

காத பதார்த்தங்களின் சம்பந்தம் சமவாயம். இதைப் பின்வரும் அப்பர் பாசுரத்தில் நன்கு காணலாம்.

இறந்தார்க்கு மென்று மிறவா தார்க்கும்
இமையவர்க்கு மேகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவா தார்க்கும்
பெரியான்றன் பெருமையே பேச நின்று
மறந்தார் மனதென்றும் மருவார் போலும்
மறைக்காட் டுறையும் மழுவாட் செல்வர்
புறந்தார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்சிற் றம்பலமே புக்கார் தாமே.

புக்க திருத்தாண்டகம் - 7.

அபாவமே திரவியமன்று.சமவாயமும் அதிலில்லை. சையோகமும்,சமவாயமும்பாவதர்மங்கள் (Conceptions) ஆகையால், விசேடண விசேடிய பாவம் சம்பந்தமாகக் கொள்ளலாகாது. அபாவமும் விசேடணமாதலின் அவ்விசேடணமும்அபாவத்திற்குத் தன்னுடையதென்னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாதோ, அதுவே விசேடண மாதலால், இது ஊகித்தறியத்தக்க மனோதர்மமாய் நிகழும். இவ்வாறு ஊகித்தறியும் தத்துவத்தைப் பிரமாணியமெனத்தர்க்கநூல்கள் விரித்துரைக்கும். அதனைச் சிறிது காண்போம்:-

(iii) பிரமாணியம் :-

இது வஸ்துகதி அல்லது உண்மைநிலை யெனப்படும். நீர் முதலிய ஞானம் தோன்றுகையில் அந்த ஞானத்தினது பிரமையின் தன்மையைத் துணிந்து ஒருவன் நீர் முதலிய பொருள்களிற் செல்கின்றான். இவன் சந்தேகத்தோடு ஒருகாலத்தில் சென்று பிற்காலத்தில் சந்தேகம் நீங்கிப் புனல் முதலியவற்றை அடைந்தபோது பிரமாணியம் துணிகின்றான். (பிரமாணியம் என்பது பிரமையின் தன்மை)

சங்கை யுள்ளதும் சாவது மெய்யுமை
பங்க னாடி பாவியே னுய்ய
அங்க ணனெந்தை யன்பிலா லந்துறைச்
செங்க ணாடிச் சேரவும் வல்லனே.

திரு அன்பிலாலந்துறை-திருக்குறுந்தொகை.

இவ்வாறு முதலில் இதற்கு வடிவம்; இது புனல், இது புனலென யானுணர்ந்தேன் என்னும் இருவகை ஞானங்களாகிய முன்னிகழ் உணர்வும். ‡ பின்னிகழ்

உணர்வும் முறையே வியவசாய ஞானமென்றும் அநுவியவசாய ஞானமென்றும் தர்க்க நூலார் கூறுவர்.

இவற்றிற்குப்பின்னர், பிரமாணியம் அப்பிரமாணியம் என்னும் இருதரும ஸ்மரணையும், அதன் பின்னர் இந்த ஞானம் பிரமையா அல்லவா, என்கின்ற பிரமாணிய சந்தேகமும் நிகழ, அதன் பிறகு விசேட தரிசனத்தின் பின்னர்ப் புனல் ஞானத்தின் பிரமாணியத்தைக் கேவலவியதிரேகி யனுமானததாற் றுணிகின்றானென்பர். இது பிறதாற் பிரமாணியவாத மெனப்படும். (This is the psychological process of apperception)

மேற்கூறிய வியவசாய ஞானமாவது நேத்திரமுதலிய பிரமாணங்களா லுண்டாவது. (உ - ம்)

கானவிளங் கலிமறவ னாகிப் பார்த்தன்
கருத்தளவு செருத்தொகுதி கண்டார் போலும்
ஆனவிளங் கடுவிடையொன் றேறி யண்டத்
தப்பாலும் பலிதிரியு மழகர் போலும்
தேனவிளங் குவளைமலி தென்றல் முன்றிற்
செழும்பொழிற்பூம் பாளைவிரி தேறல் நாறும்
கூனவிளம் பிறைதடவு கொடிகொள் மாடக்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

முடிகொண்ட வளர்மதியும் மூன்றுப்த் தோன்றும்
மூளைஞாயி றன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவற் செவ்வாயு மழகாய்த் தோன்றத்
துடிகொண்ட விடைமடவாள் பாகங்கொண்டு
சுடர்ச்சோதி கடிச்செய்பொன் மலைபோ லிந்நாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் - திருத்தாண்டகம் 2-6.

அநுவியவசாயஞானமாவது மனவடிவப்பிரமாணத்தினாலுண்டாகும் ஞானம். (உ - ம்)

இரவனும் எல்லி நடமா டியாம்
எண்திசைக்குந் தேவனும் என்னு ளானும்
அரவனும் அல்ல லறுப்பா னுமாம்
ஆகாச மூர்த்தியா மானே றேறும்
குரவனுங் கூற்றை யுதைத்தான் றானுங்
கூறாத வஞ்சக் குபலர்க் கென்றும்
கரவனுங் காட்சிக் கெளியா னுமாம்
கண்ணனுங் கருகாவூ ரெந்தை தானே.

திருக்கருகாவூர் - திருத்தாண்டகம் 4.

எனவே ஞானத்தின்ஞானம்அநுவியவசாயமெனப்படும். இதைத் திரிபுடி ஞானமென்பர். திரிபுடி என்றால் மூன்று புறமுடையது (Three phases). அவையாவன, காண்பான் காட்சி காணப்படும்பொருள் என்று மூன்று சமுதாய அந்நியோன்யம். (உ - ம்)

கொக்கி றகர்கு ளிர்மதிச் சென்னியர்
மிக்க ரக்கர் புரமெரி செய்தவர்
அக்க ரையின ரன்பிலா லந்துறை
நக்கி ருவரும் நம்மை யறிவரே.

திரு அன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை 5.

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழநட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டே னிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
ஓதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே.

புக்க திருத்தாண்டகம் 10.

‡ முன்னமவனுடைய நாமங் கேட்டாள்,
மூர்த்தியவ னிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்,
பெயர்த்து மவனுக்கே பிச்சை யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்,
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கேட்டாள்,
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே.

திருவாரூர்-திருத்தாண்டகம் 7.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[412-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 2.

இடம்:—பொதுமன்றம்.

[ப்ரூட்டஸும் காஸ்ஸியஸும் நகர்ச் சனங்கள் கூட்டமாய்ப் பின்தொடர வருகின்றனர்]

ஜனங்கள்:—எங்களைத் திருப்திசெய்யவேண்டும்;நாங்கள் திருப்தியடைந்தவாக ளாகவேண்டும். (1)

ப்ரூட்டஸ்:—ஆயின், என்னுடன் வந்து என் சொற்களுக்குச் செவிகொடுங்கள்; நண்பர்காள்-காஸ்ஸியஸ், நீ மற்ற தெருவிற்குச் சென்று இத்தொகையினைப் பிரித்துவிடு (2)—நான் பேசுவதைக் கேட்க விரும்புகின்றவர் இங்கேயே இருக்கட்டும். காஸ்ஸியஸின்பின் செல்ல விரும்புகின்றவர்கள் அவனுடன் போகட்டும். ஸீஸரின் மரணத்திற்குக் காரணங்கள் உலகறிய வழங்கப்படும்.

முதல் நகரவாசி:—நான் ப்ரூட்டஸ் பேசுவதைக் கேட்பேன்.

இரண்டாம் நகரவாசி:—நான் காஸ்ஸியஸைக் கேட்பேன். தனித்தனி வழங்கக்கேட்டபின் நாம் அவர் காரணங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம். (3)

[சனங்களிற் சிலருடன் காஸ்ஸியஸ் போகின்றான். ப்ரூட்டஸ் மேடையின்மீது ஏறி நிற்கின்றனன்]

மூன்றாம் நகரவாசி:—பெருந்தகை ப்ரூட்டஸ் ஏறிவிட்டான்: இரைச்சலிடாதீர் !

ப்ரூட்டஸ்:--இறுதிவரையிற் பொறுமையாயிருங்கள்-உரோமர்காள், சுதேசிகாள், அன்பர்காள்,யான் இயம்புவனவற்றை என் வழக்கின்பொருட்டுக் கேண்மின் (4), அதனைக் கேட்கும்வண்ணம் சற்றேசும்மாவிருங்கள். என் கௌரவத்தைக் கருதி என்னை நம்புங்கள்; என்னை நம்பும்பொருட்டு என் கௌரவத்தின்பால் உங்கள் நன்மதிப்பை வையுங்கள். என்பால் குறைகண்டெனனைக் கடிவதாயின் உங்களறிவினால் கடியுங்கள். செவ்விதின் ஆய்ந்து தேர்ந்து நீதியைச் செலுத்தும்பொருட்டு உங்கள் உணர்வுகளை எழுப்பிக்கொள்ளுங்கள் (5). ஸீஸரின் அருமை நண்பர் யாரேனும் இக்கழகத்தின்கண் இருப்பாரேயாயின், ப்ரூட்டஸ் ஸீஸரின்பால் வைத்த அன்பு, அவர்கொண்டிருந்த அன்பிற் குறைந்த தன்றென்பதை அவருக்குச் சொல்லுகின்றேன் (6). அவ்வாறாயின், ஸீஸருக்கு மாறாக ப்ரூட்டஸ் எழுந்தது ஏனென அந்நண்பன் வினவுவானெனின், என் விடை இது—ஸீஸரைக் குறைந்து நான் காதலித்தேன் என்பதன்று, உரோமினை அதிகமாய்க் காதலித்தேன் என்பதே. (7). ஸீஸர் இறந்து எல்லீரும் விடுதலையடைந்தவர்களாய் வாழ்வதனினும், ஸீஸர் உயிருடன் இருக்க நீங்களெல்லாம் அடிமைகளாய்ச்சாவதுவே உங்களுக்குச் சம்மதமாகுமா (8). ஸீஸர் என்னை நேசித்தானாதலின் அவனுக்காக அழுகின்றேன்; அவன் பாக்கியசாலியாயிருந்தானாதலின்,அதன்பொருட்டு களிமிக நான் மகிழ்கின்றேன்; அவன் பராக்கிரம

(1) ‘ஸீஸரைக் கொன்றதே தகுதி என்பதற்குத் தக்க காரணங்கள் கூறி எங்களைத் திருப்தி செய்யவேண்டியது உங்கள் கடமை. அப்படிச் செய்யீராயின் ஸீஸரின் கொலையைக்கண்டு நாங்கள் சும்மாவிருக்கமாட்டோம்’’ என்பதைச் சனங்கள் ப்ரூட்டஸிற்குத் தெரிவிக்கின்றனர்.

(2) நண்பர்காள் என்று சனங்களை அழைத்து அவர்களுக்கு ஏதோ சொல்ல வாயெடுத்த ப்ரூட்டஸ், அதற்குள், காஸ்ஸியஸினிடம் ஒருபுறமாய், “நீ இந்தச் சனங்களின் ஒரு பகுதியை யழைத்துக்கொண்டு வேறோர் தெருவிற்குச் சென்று அங்கு விடயத்தைஎடுத்துச்சொல்’’ என்கின்றான். பெருங் கும்பலைப் பிரிப்பதற்குச்செய்த உபாயம் இது.

(3) இவர் சொல்லுங் காரணங்களின் உண்மையைச் சோதிப்பதற்கு இதுவும் நல்ல உபாயந்தான் என்று சனங்கள் ஒவ்வுகின்றனர்.

(4) அரசிய லுரையாளர் மற்றெல்லாரையும்போல், ப்ரூட்டஸ் சனங்களின்முன் தன்னை மிகவும் தாழ்மைப்படுத்திக்கொண்டு பேச ஆரம்பிக்கின்றான். அன்பர்காள் என்று அவர்களை அழைப்பது வாசாகைங்கரியமன்றி வேறொன்றுமன்றென்பது வெளிப்படை. தேசபக்தன் என்னும் பேரினைப் பரக்கப்பேசுவது சனங்களினுடைய ஆதரவைப்பெறுவதற்கு எப்பொழுதும் எவ்விடத்தும் சிறந்ததோர் உபாயம் ஆவதை அறிந்த ப்ரூட்டஸ், சுதேசிகாள் என்று அழைக்கின்றனன். அதன் பிறகு, கேட்போர் பிரமிக்கும்படி சொற்சாலங்கள் செய்வது நாவன்மையுடையோர்க்குக் கைவந்த சூழ்ச்சிகளிலொன்று. நான் சொல்வதைக் கேளுங்கள்—கேட்கும் பொருட்டுச் சும்மாவிருங்கள்; நம்புங்கள்—நம்பும் பொருட்டு மதியுங்கள், எனச் சொல்மாற்றித் தொடர்கின்ற இவ்வாக்கியங்கள் அவ்வினத்தைச் சேர்ந்தன.

(5) இதுவரையில் முன்னுரை. இதனால் சனங்களினுடைய கவனத்தை ப்ரூட்டஸ் தன்வசமாக்கிக்கொண்டான். பொதுஜனத் தலைவர்க ளாகவேண்டி விவகரிப்பவர்களெல்லாரும் சனங்களுக்குத் தாங்கள் அடங்கித் தாழ்ந்து கீழ்ப்படிவதை முதலில் தெரிவித்துக்கொள்ள வேண்டுமாகையால், ப்ரூட்டஸ் ஜனங்களினுடைய தீர்ப்பிற்குத் தன்னை ஆளாக்கிக்கொள்கின்றான்.

(6) ஸீஸரிடத்தில் யான் வைத்திருந்த அன்பு வேறெவர் அன்பிற்குஞ் சிறிதும் குறைந்ததில்லை என்பது பொருள்.

(7) ஸீஸரின் உண்மை நண்பனாயிருந்தும் அவனை நான் கொல்லப் புகுந்ததற்குக் காரணம் என்னவோவென்றால்—ஸீஸரை நேசித்ததைக் காட்டிலும், தேசபக்தியின் மிகுதியால் இந்த உரோமாபுரியை நான் அதிகமும் நேசித்தேனாதலின், இதன் விடுதலையைக்கருதி ஸீஸரையும் கொல்ல நேர்ந்தேன்—என்பது பொருள்.

(8) ஸீஸர் இருக்கும்வரையில் நீங்கள் அடிமைகளே; அவன் செத்தால் நீங்கள் விடுதலை யடைகின்றீர். இந்த இக்கட்டில், ஸீஸரைக்காட்டிலும் உங்களுடைய நன்மையையே நான் அதிகம் விரும்புபவனாதலின், அவனைக் கொன்றேன்.—என்பது பொருள்.

(9) இவைகளெல்லாம் சித்திரப்பேச்சுக்கள். கேட்போர் காதுகள் நிறையுமேனும், ஸீஸரைக் கொன்றதற்கு ஏற்ற காரணங்கள் சிறிதும் ஆகா. “ஸீஸர் பேராசையுடையவனாய் இருந்தமையாற் கொன்றேன் என்றான். எனினும் எவ்விதத்தில் ஸீஸரின் பேராசை வெளிப்பட்டதென்பதைக் காட்டுவதற்கு ஒரு சொல் சொல்லவில்லை. இவன்பின் பேச வருகின்ற ஆண்டனி, இவன் சொல்லாமல்விட்ட இதனை

சாலியாயிருந்தானாதலில் அவனை நான் பெருமையுறப் பாராட்டுகின்றேன்; எனினும், அவன் பேராசையுடையவனா யிருந்தானாதலின், அவனை யான் கொன்றேன். இதோ, அவனன்பிற்குக் கண்ணீரும், பாக்கியத்திற்குப் பெருமகிழ்வும், பராக்கிரமத்திற்குப் பெருமையும், பேராசைக்கு ஓர் சாவும் இருக்கின்றன. (9). அடிமையாயிருப்பதற்கே விரும்புகின்ற அத்துணைக் கயவன் இங்கு யாவனே உளன்? உளனாயின், உரைத்திடுக; ஏனெனில் அவனுக்கே நான் அபராதஞ் செய்தவனாகின்றேன். உரோமனாயிருப்பதற்கு விரும்பாத முரடனொருவன் யாவனே இங்குளன்? உளனாயின் உரைத்திடுக; ஏனெனில் அவனுக்கே நான் அபராதஞ்செய்தவனாகின்றேன். தன் தேயத்தில் பக்தியில்லாப் பாதகன் இங்கு யாவனே உளன்? உளனாயின் உரைத்திடுக; ஏனெனில் அவனுக்கே நான் அபராதஞ் செய்தவனாகின்றேன்.(10) விடை வேண்டித்தாழ்கின்றேன். (11)

ஜனங்கள்:—ஒருவருமில்லை, ப்ரூட்டஸ், ஒருவருமில்லை.

ப்ரூட்டஸ்:—ஆயின், ஒருவருக்கும் யான் அபராதஞ் செய்ததுமில்லை. நீங்கள் ப்ரூட்டஸிற்குச் செய்யக்கூடியதைக் காட்டிலும் ஒன்றும் நான் அதிகமாய் ஸீஸருக்குச் செய்துவிட்டேனல்லேன். (12). அவன் இறந்த செய்திகள் நம் சபாமண்டபத்தில் வரையப்பெற்றிருக்கின்றன (13). அவன் பெருமை புகழ்களை, அவைகளுக்கவன் தகுதியுடையவனாகும் விடயங்களில், குறைக்கவில்லை; மற்று, அவன் சாவதற்குரியவனான குற்றங்களை வற்புறுத்தவும் இல்லை. (14). துயர்கூர்ந்து மார்க் ஆண்டனி உடன்தொடர இதோ அவனுடல் வருகின்றது.

[ஸீஸரின் உடலோடு ஆண்டனியும் மற்றவர்களும் வருகின்றனர்]

அவன் சாவிலவனொன்றுங் கைதரவில்லையாயினும் அவன் செத்ததன் இலாபத்தை இவன் பெறுவான் (15).—இந்த ஜனஆட்சியில் ஓர் இடம்; ஏன்! உங்களில் யார்தான் பெறமாட்டீர். (16). முடிவாக இதுகூறி யான் விடைபெற்றுக் கொள்கின்றேன்—உரோமின் நன்மைக்காக என் அன்பிற் சிறந்தவனை யான் கொன்றதுபோன்றே, என் மரணத்தை எனது தேயம் வேண்டுமென்று சித்தங்கொள்ளுங்காலத்தில் அக் கத்தியையே எனக்கும் வைத்திருக்கின்றேன்.

ஜனங்கள்:—வாழ்க, ப்ரூட்டஸ், வாழ்க, வாழ்க!

முதல் நகரவாசி:—வெற்றியுடன் அவனை நாம் அவன் வீட்டிற்குக் கொண்டு சேர்ப்போம்.

இரண்டாம் நகரவாசி:—இவன்குல முன்னைபோருடன் இவனுக்குமோர் உருவச்சிலை கொடுப்போம் (17.)

மூன்றாம் நகரவாசி:—இவனே ஸீஸராயிருக்கட்டும். (18.)

நான்காவது நகரவாசி:—ஸீஸரின் நற்குணங்கள் ப்ரூட்டஸில் முடிசூடட்டும். (19)

முதல் நகரவாசி:—கொட்டு முழக்குக் குதாகலங்களுடன் இவனை வீட்டிற்குக் கொண்டு செல்வோம்.

ப்ரூட்டஸ்:—சுதேசிகாள்—

இரண்டாம் நகரவாசி:—சும்மாவிருங்கள், கேளுங்கள்! ப்ரூட்டஸ் பேசுகின்றான்.

முதல் நகரவாசி:—ஓ! இரையாதீர்!

யேபற்றித் தன் எண்ணத்தைச் சாதித்துக் கொள்கின்றான். எவ்வகையில் ஸீஸர் பேராசையுடையவனாயிருந்தானென்பதும், என்ன கொடுமைகள்செய்து ஜனங்களை அவன் அடிமையாய் வைத்திருந்தானென்பதும் விளக்கினாலன்றோ ப்ரூட்டஸின் காரணங்களின் உண்மை வெளிப்படும். பொது ஜனங்களுக்கு அவ்வளவு ஆராய்ந்து அறியத்தக்க புத்தி இருப்பதில்லை என்பதை நன்குணர்ந்த எல்லாப் பொது ஜனத் தலைவர்களையும்போல் ப்ரூட்டஸும் இவ்வண்ணம் பொறுப்பின்றிப் பேசத் துணிந்தான்.

(10) இந்த வசைக்குரியவன் தான் தான் என்று ஒருவனும் முன்வரமாட்டான் என்ற நிச்சயத்தால் ப்ரூட்டஸ் இவ்வண்ணம் கேட்கின்றான்.

(11) இந்தச் சொல்வன்மைக்குச் சனங்கள் ஆளாகின்றதைக் குறிப்பாலுணர்ந்த ப்ரூட்டஸ், அவர்கள் விடையை வாய்விட்டுச் சொல்லும்படி தூண்டுகின்றான்.

(12) நான் ஸீஸரைக் கொன்றதுபோலவே, நீங்களும் என்னிடத்தில் எப்பொழுது குற்றங் கண்டுபிடித்தாலும் அப்பொழுதே கொன்றுவிடலாம், என்பது பொருள்.

(13) ஸீஸரைக் கொன்றது தனித்த பகையாலன்று என்பதையும், பொதுஜன சம்பந்தமான நன்மையைச் சார்ந்த காரியமே என்பதையுங் காட்ட, நகரச்சபை அரசாங்க 'தஸ்தாவேஜிகளில்' இவ்விடயத்தைப் 'பகிரங்கமாக' எழுதிவைத்திருக்கின்றோம்—என்பது பொருள்.

(14) அந்தத் தஸ்தாவேஜிகளில், இவனுடைய பெருமையையும் புகழையும் குறைக்காமலும், இவனுடைய குற்றங்களை அதிமாகக் காட்டாமலும், எழுதியிருக்கின்றோம்—என்பது பொருள். இதனால் தனக்கு ஸீஸரினிடத்தில் உள்ள அன்பைத் தெரிவிக்க முயல்கின்றான்.

(15) ஸீஸரைக் கொல்லும்காரியத்தில் ஆண்டனி எங்களுக்கு உதவியொன்றுஞ் செய்யவில்லை. ஆயினும், நாங்கள் பெருந்தன்மை யுடையவர்களாகையால், ஸீஸரின் சாவினால் பெற்ற இலாபத்தில் ஒரு பங்கு இவ்வாண்டனிக்குங் கொடுப்போம—என்பது பொருள். அந்த இலாபம் எவ்வகைத்தென்பதைப் பின்னர்ச் சொல்கின்றான்.

(16) தனக்கு விரோதமாகாதபடி ஆண்டனிக்கு இந்த உத்தியோக இலஞ்சம் காட்டுகின்றான். எக்காலத்திலும் அரசியல் கட்சிகளின் அமைப்பெல்லாம் இந்த இலஞ்சத்தாலேயே இயல்வதாகின்றது. சனங்கள் அக்கட்சிகளை ஆதரிப்பதும் அவர்களில் ஒவ்வொருவனும், தனக்கொரு காலத்தில் ஏதாவதொரு உத்தியோகம் கிடைக்காதா என்று அங்காந்திருக்கும் ஆசையினாலேயே.

(17 ப்ரூட்டஸின் உருவச்சிலை செய்து, இவன் முன்னையோர் சிலைகள் வைத்திருக்கும் வரிசையில் வைத்து இவனைப் பெருமைப்படுத்துவோம், என்பது பொருள்.

(18) பொது ஜனங்களின் இயற்கை இரகசியத்தை ஷேக்ஸ்பியர் இவ்வொரு சிறு வாக்கியத்தால் காட்டுகின்ற திறமை மிகவும் வியக்கத்தக்கது. "ஸீஸர் பேராசையுடையன், கொடுமைசெய்து உங்களை அடிமைகளாய் வைத்திருந்தான், ஆகையால் அவனைக் கொன்றேன்" என்று சொல்லி நின்ற ப்ரூட்டஸைப் பெருமைப்படுத்த நினைத்த சனங்கள், "அவனே ஸீஸராகட்டும்" என்று தம்மையும் அறியாமல் ஆசிர்வதித்து விடுகின்றார். இவ்விடயங்களின் உண்மை நிலையை விளக்கி முன், 1928-வது ஆண்டு, இதழ்களில் "அரசியலும் அரவிந்தரும்" என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருக்க, அவ்வாண்டு 1-வது வால்யூம், 848-வது பக்கத்தில் காணலாம்.

(19) மற்றொருவன் அவனைத் திருத்துகின்றான். ஸீஸரின் நல்ல குணங்கள் மாத்திரமே ப்ரூட்டஸில் சிறந்து ஓங்கட்டும், என்பது பொருள்.

பெரிய புராணம் மூலமும், அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும்.

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவரும்

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம்!

சேக்கிழார்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை கனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரியபுராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம். இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்கள் எளிதில் வாங்கிப் பயன்பெற இயலாது வருந்துதல் கண்டு, அவ்வருத்தம் போக்குதற்பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பை டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக. முதல் சஞ்சிகை 1932வரு ஜூன்மீ 10உ வெளிவரும். முழுப் புத்தகம் சுமார் 20 சஞ்சிகையில் முடிவு பெறக்கூடும். புத்தகம் முடிந்தபின் விலை ரூபா 5-க்கு மேல் ஆகலாம்.

சந்தா விவரம்:—மாதச் சஞ்சிகை ஒன்று தபாற் செலவுடன் ரூபா 0-4-6. புத்தக முழுவதற்கும் முன்பணம் (இம் முன்பணம் 1932வரு ஜூன்மீ 1உக்குள் அனுப்பப்படவேண்டும்)—சென்னை ரூபா 3-8-0. வெளியூர் தபாற் செலவுடன் ரூபா 4-0-0. 6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக தரப்படும்.

— விலாஸம்:—முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை. —

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்



குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்ராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவனாம்ருதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பேஷல் மருந்து 16 நாட்களுக்கு ரூ. 2-0-0.

லிமிடெட். ஸோல் ஏஜண்டு: கன்வஸர்ன், மதராஸ்.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் மட.டூமெடிகேடட்-டப்பி

பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம். வேளாளர் வீதி. புரைசைபாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

தினகர வெண்பா

S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L, அவர்கள் பதிப்பித்தது.

கலாநிலயம் வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை அணா 6.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு மூபல வேண்டா. விளம்பினைல் வெட்கக்கேடு. கல்லாத பேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேத வியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S நடராஜ பிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினுமருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்திபாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவவாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B A B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஃகாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவசரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— டைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அலலது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

சென்னையில் கொள்ளை:—சென்னைப் பூக்கடைக்கருகில் உட்டாதாஸ் என்னும் மார்வாரி வகுப்பினரும், கே. வெங்கடசாமி செட்டியாரும் கூட்டாளிகளாகக் காசுக்கடை வியாபாரம் செய்து வருகின்றனர். சென்ற சில மாதமாகத் தங்கத்தின் விலை உயர்ந்திருப்பதால் இவர்கள் தங்கநகைகளை விலைக்கு வாங்கி ஏற்றுமதி செய்துவந்தனர். இம்மாதம் 12-ந் தேதியன்று இரவு எட்டு மணிக்கு வழக்கம்போல் வாங்கிய நகைகளையும் அன்று கையிலிருந்த பணத்தையும் மூன்று பெட்டிகளில்வைத்துக் குமாஸ்தாக்களிடம் கொடுத்து வீட்டிற்கு அனுப்பினர். பையாலி, ராமசந்திரராவ், நாராயண செட்டி ஆகிய மூவரும் இப்பெட்டிகளை எடுத்துக் கொண்டு சென்றனர். சௌகார்பேட்டை பெரிய நாயக்கன் தெருவில் இவர்கள் செல்லுகையில், இவர்களுக்குப் பின்னால் ஒரு மோட்டார் வண்டி வேகமாக வர இவர்கள் ஒருபுறமாய் ஒதுங்கினர். மோட்டார் வண்டி அவர்களருகில் நின்றது. மூன்று பேர் இவர்கள் முன் நின்றனர். நின்றவர்களில் ஒருவன் பையாலி என்பவனைத் தாக்கி அவன் கையிலிருந்த பெட்டியைப் பறித்துக்கொண்டான். மற்ற இருவரும் இரு குமாஸ்தாக்களினிடம் இருந்த பெட்டியைப் பிடுங்க முயன்றும் இயலவில்லை. கடைசியில் ஒரு பெட்டியுடன் மோட்டார் வண்டியில் அவர்கள் சென்றுவிட்டனர். அப்பெட்டியில் 8000 ரூபாய் பெறுமானமுள்ள தங்க நகைகள் இருந்தனவாம். இவ்விஷயமறிந்த போலீசார் இக்கொள்ளைக்காரர்களில் சிலரை இதுவரைப் பிடித்துள்ளார்கள் என்று தெரிகின்றது.

***

காஷ்மீரத்தில் வேலையில்லாக் கொடுமை:—காஷ்மீரத்தில் எளிய வகுப்பினர் வேலையில்லாது கஷ்டப்படும் செய்தியை மன்னர் அறிந்ததும், இவர்களுக்கு வேலை கொடுக்கும் பொருட்டு ஒரு புதிய சாலையைப் போடத் தீர்மானித்து அன்னதற்கு வேண்டியன செய்ய உத்திரவிட்டுள்ளார் என்று தெரிகின்றது. இச்சாலை போடும் வேலையில் வேலையேற்பவர்க்கு மராமத்து இலாக்காவில் கொடுக்கப்படும் சம்பளத்தில் 3 இல் 2 பங்கு சம்பளம் கொடுக்கப்படுமாம்.

***

பிரஞ்சுக் குடியரசுத் தலைவர்:—பிரஞ்சுக் குடியரசுத் தலைவரான பால்டமூர் என்பவர் ஒரு ருஷியனால் மே மாதம் 13-ந்தேதி சுட்டுக் கொலைப்பட்டார் என்று அயல் நாட்டுச் செய்தி கூறுகின்றது. சுட்டுக்கொன்றவன் ஒரு ருஷியன் என்றும் அவன் சித்தஸ்வாதீனமில்லாதவன் என்றும் தெரிகின்றது. பால்டமூர் ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் 14 வயதில் ஒருஎன்கிரேவரிடம் வேலையிலமர்ந்தார். அவர் ஊக்கம் அதிகமுடையவர். தனது முயற்சியால் கற்கவேண்டியவைகளைத் தாமாகக் கற்று ஒரு பெரிய ராஜ தந்திரியானார். ஐரோப்பிய யுத்தம் நடந்தபொழுது அவர் தமது பிள்ளைகளை யிழந்தார். அவர் சாகும்பொழுது அவருக்கு வயது 75. இவ்வயதின் பெருபாகத்தைப் பிரான்ஸின் முன்னேற்றத்திற்காக அளித்தவர்.

***

ஏடனில் வகுப்புக் கலவரம்:—ஏடனில் அராபியருக்கும் யூதர்களுக்கும் வகுப்புக் கலகம் ஏற்பட்டதன் பயனாக, ஏடனில் எங்கும் குழப்பமாயிருக்கின்றதாம். மேமாதம் 24-ந் தேதியன்று இருவகுப்பினருக்குள்ளும் குழப்பமேற்ப[illegible]யர் மனுதையை அசுத்தப்படுத்த முயன்றனராம். இதனால் ஏற்பட்ட கலகத்தில் 16 அராபியர்களும் 3 யூதரும் காயமடைந்தனராம். யூதர் கடைகள் பல அராபியர்களால் கொள்ளையிடப்பட்டனவாம். போலீசார் அமைதியை உண்டாக்க முயன்றுவருகின்றனராம்—என மேயீ 25 தேதியிட்டுள ஒரு ஏடன் செய்தி கூறுகின்றது.

***

பிரமாண ரத்து மசோதா:—ஐயர்லாந்து ஸினேட் சபையில் ஐரிஷ்குடியரசுக் கட்சியின் தலைவரான திவாலரா ராஜவிசுவாஸப் பிரமாணம் செய்துகொள்ளுதல் ஒழியவேண்டுமென்று ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்றார். மசோதா ஸினேட் சபையால் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும், ஜூன் மாதம் முதல்வாரம் மசோதாவின்மேல் வாதம் நடக்கும் என்றும் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

லோதியன் கமிட்டி அறிக்கை:—இந்திய ஓட்டுரிமை விஷயமாக நிர்ணயம் செய்ய இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து ஆய்ந்த லோதியன் கமிட்டியார் தங்கள் அறிக்கையை முடித்தனர் என்றும் அவ்வறிக்கை ஜூன் மாதம் 3-ந் தேதி வெளியாகுமென்றும் தெரிகின்றது. இவ்வறிக்கை கலெக்டர் ஆபீஸிலும் அரசாங்கப் புத்தக நிலையங்களிலும் விலைக்குக் கிடைக்குமாம்.

— தேகபலம் —
:: புத்திர சந்தானம் ::
இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள்.
சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.
மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.
இனும்! காம சாஸ்திரம் இனும்!
கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5 மற்ற பர்வம் அச்சில்
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

எங்களிடம் தமிழ் நாவல்களும், புராண நூல்களும், இராமாயண பாரத காவ்ய நூல்களும், தமிழில் சட்ட புத்தகங்களும் கிடைக்கும். விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.
V. S. T. சாமி, புத்தக வியாபாரம்,
புரசைவாக்கம் ஹைரோட், வேப்பேரி, சென்னை.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 19 4] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னே.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலேகளும், கரும்பாலேகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலேகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லேனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளேயுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்பிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலேகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லே. கேட்லாக்கிற்கு எழுதவும்.

ஆங்கில ஆசான்

எமதுலேடி டிரேட் மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

60 நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களேவிட அதிகப் பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் அச்சியற்றியுள்ளோம். இதுவரை 53100 புத்தகங்கள்செலவாயுளது இதன் மேன்மைக் கடையாளம். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில வாசானைப்போல், வேறு எப்புத்தகமும் சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவாது. நம் முன்பதிப்புப் புத்தகங்களே வைத்திருப்பவர் கூட 10-வது பதிப்பை வாங்கவேண்டும். இதில் 1 அணு முதல் 3000 ரூபாய் வரைச் சம்பளம் வாடகைக் கணக்குளது. 800 பக்கங்களுக்கு மேற்கொண்ட அழகிய சீமைக் கலிக்கோ பயிண்டுடையது.

விலே ரூ 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலே வீதி, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over ...	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of ...	16.54 %
Claims paid up to end of 1931 over ...	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS.

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)